
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ ThinakaranLk / ThinakaranLK
2024 ஜனவரி 29 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්
வருட. 92 இல. 25 | Monday 29, January, 2024 | 12 பக்கங்கள் | 50/-

## 61 தோட்டாக்களுடன் சந்தேக நபர் கைது

**பிலியந்தலையில் சம்பவம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெளிநாட்டு துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படக்கூடிய 61 தோட்டாக்களுடன் நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நபர், 61

04



# அதிக வட்டி தருவதாக கூறி பிரமிட் முறையில் நிதி மோசடி

## ஆயிரம் பேரிடம் ரூபா 500 கோடியை பெற்று தலைமறைவானவர் கைது

## பஸ்நாயக நிலமேயாக நடித்து ஊரிலிருந்து வெளியேறல்

## பெப். 05 வரை விளக்கமறியல்; கஹட்டகஸ்திகிலிய பதில் மஜிஸ்திரேட் நீதவான் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பிரமிட் முறையில்,500 கோடி ரூபா நிதியை மோசடிசெய்துள்ள சந்தேகநபரை பெப்ரவரி 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கஹட்டகஸ்திகிலிய பதில் மஜிஸ்திரேட் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கலன்பிந்துனுவெவ மற்றும் அதனை அண்டிய பிரதேச மக்களிடமிருந்து பணத்தை பெற்ற இந்நபர்,இம்மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இவரை,சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

கண்டி பிலிமத்தலாவ பிரதேசத்தில் தலைமறைவாக வசித்த நிலையிலேயே இந்நபரை அதிகாரிகள் கைது செய்தனர்.

39 வயதான சந்தேக நபர் அந்நிதியில் கலன்பிந்துனுவெவ, அநுராதபுரம், கடவத்தை மற்றும் மாத்தளை பிரதேசங்களில் வீடு மற்றும் காணிகளையும் கொள்வனவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ட்ரேட்வின் என்ற பெயரில் நிதி நிறுவனமொன்றை ஸ்தாபித்து இந்நபர், செய்துள்ள மோசடிகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன.

இணையத்தளம் மூலம் பணத்தை வைப்பிலிடும் முறைமையின் கீழ், இந்த மோசடியில் இவர் மேற்கொண்டுள்ளார். அவரது

04

## நிறுவன கட்டமைப்பின் கீழான காலி நகர அபிவிருத்தித் திட்டம்

**துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல்**




காலியின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவத ற்காக விசேட ஆணைக்குழுவை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். காலி அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வதற்காக (27) கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலி நகரம் மற்றும் காலி கோட்டை பிரதேசங்களுக்கு விஜயம் செய்து அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்வையிட்டார்.

04

**செங்கடல் நெருக்கடியால் கொழும்பு துறைமுக செயற்றிறன் அதிகரிப்பு**

## இரண்டு முனையங்களில் மாத்திரம் 193,000 கொள்கலன்கள்



மத்திய கிழக்கின் செங்கடலில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக, கொழும்பு துறைமுகத்துக்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், கொள்கலன் இயக்கத் திறனும்

04

**உடன் அமுலுக்கு வரும் வகையில்**

## இலங்கை கிரிக்கெட்டின் தடையை நீக்கியது ஐ.சி.சி

**லோரன்ஸ் செல்வநாயகம்**




சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலினால் இலங்கைக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் விளையாட்டுக்கான தடை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலினால் இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள தடை இன்னும் சில தினங்களுக்குள் நீக்கப்படும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஏற்கனவே தெரிவித்திருந்தார். இலங்கை

04

## சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பு, சில தமிழ் அரசியல் தரப்பு மாயையை கிழித்துள்ளது



தமிழ் அரசியல் தரப்புக்களால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான எதிர்பார்ப்புக்கள், அர்த்தமற்றவை என்பது வெளிப்படுத்தப்

04

## தேர்தலில் இலஞ்சம்: தண்டப்பணம் ரூபா 10 இலட்சமாகிறது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வாக்குகளைப் பெற்றுக்கொள்ள இலஞ்சம் வழங்குவோருக்கான தண்டப்பணத்தை ஐநூறு ரூபாவிலிருந்து பத்து இலட்சமாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றத்துக்கு நீண்ட காலமாக 500 ரூபா தண்டப்பணமே அறவிடப்பட்டு வந்துள்ளது. தற்போது இந்த தண்டப் பணத்தை 10 இலட்சமாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**கண்டி பாரிய அபிவிருத்தி; உலக வங்கி பூரண ஆதரவு**



உலக வங்கியின் உட்கட்டமைப்பு மற்றும் நிலையான வளர்ச்சி பயிற்சிக் குழுக்களின் கிழக்கு ஆசிய, பசுபிக் பிராந்திய திட்டத் தலைவரான கலாநிதி Fei Deng, குழுவினர் கண்டி பாரிய அபிவிருத்தி திட்ட ஆரம்ப நிகழ்வில், அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவை சந்தித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

## ஜனாதிபதி நிதியத்தில் வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகை அதிகரிப்பு

**மேலதிக தகவல்களுக்கு www.presidentsfund.gov.lk**




க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன.

2021 (2022) ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி, ஒரே தடவையில் சித்தியடைந்து 2024 இல்,உயர் தரத்தில் சேர்ந்த மாணவர்களுக்கே இக்கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இக்கொடுப்பனவுகள் 2024 பெப்ரவரி முதல் ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான பணிப்புரை விடுத்துள்ளார். பொருளாதார சிரமங்களை எதிர்கொள்ளும் கற்றல் திறனுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் இவர்களுக்கு இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

2021/2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப்பரிசில்

04

## வெளிநாடுகளின் தேவைகளுக்காக 'யுக்திய' நடவடிக்கை நிறுத்தப்படாது

**போதைப்பொருள் வர்த்தகர்களின் பணத்தில் வாழ்வோரே எதிர்ப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



போதைப்பொருள் வர்த்தகர்களின் பணத்தில் தங்கிவாழும் தரப்பினரே, யுக்திய விசேட நடவடிக்கையை சீர்குலைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருடன் மேற்கொள்ளப்பட்ட விசேட செயலமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர்

04

## கூட்டுக் கடற்படையணியுடன் களமிறங்கி கடத்தப்பட்ட ஆறு மீனவர்களை மீட்க அரசு கவனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சோமாலிய கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கை மீனவர்களை மீட்பதற்கு அரசாங்கம் சோமாலிய அரசின் உதவியை நாடியுள்ளது. கடத்தப்பட்ட ஆறு இலங்கை மீனவர்களுடன் ஆழ்கடல் மீன்பிடிப் படகை மீட்பதற்கும் கவனம் செலுத்தியுள்ள அரசாங்கம் இதற்காக அந்நாட்டு கடற்படையின் உதவியை கோரியுள்ளது.

கடத்தப்பட்டுள்ள மீன்பிடிப் படகு தொடர்பில் தகவல் அறியத் தருமாறு பஹ்ரைனில் உள்ள 39 நாடுகளின் கூட்டுக் கடற்படை அணிக்கு இலங்கை கடற்படை வேண்டுகோள் விடுத்துள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கெப்டன் கயான்

04

## இலங்கைக்கு IMF மீண்டும் அங்கீகாரம்



பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுத்தல் மற்றும் நிலையான அபிவிருத்தியை உருவாக்குவதற்காக முக்கியமான வரைபை (Growth Diagnostic Framework, (GDF) வெளியிட்டுள்ள முதலாவது ஆசிய நாடாக, இலங்கை திகழ்ந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் நிலையான அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் குறிப்பிடத்தக்கபடியான வளர்ச்சியை கண்டறிதல் கட்டமைப்பை (GDF) வெளியிட்ட முதல் ஆசிய நாடாக இலங்கை மாறியுள்ளதென்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து

04

## இலங்கை தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு ஒத்திவைப்பு

**புதிய திகதி விரைவில் மத்திய குழுவில் அறிவிப்பு**

**மட்டக்களப்பு விஷேட நிருபர்**



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு 2024 உப்புவெளி,

04

## கடத்தப்படவிருந்த பீடி இலைகள், வலி நிவாரணி மாத்திரைகள் பறிமுதல்

**இலங்கை பெறுமதி 3,86,40,781 ரூபா என மதிப்பீடு**

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**



தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற ஒரு கோடி ரூபா மதிப்பிலான பீடி இலைகள் மற்றும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வலி நிவாரணி மாத்திரைகளை தமிழ்நாடு கியூ பிரிவு பொலிஸார் கைப்பற்றி உள்ளனர். இவற்றின் இலங்கை பெறுமதி 3,86,40,781

04

## இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவின் பூதவுடல் நல்லடக்கம்



**ஆராச்சிக்கட்டு பகுதியில் சோகம்; அரசியல் தலைவர்கள், பொதுமக்களும் பங்கேற்பு**

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

திடீர் விபத்தில் உயிரிழந்த புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான சனத் நிசாந்த பெரேராவின் பூதவுடல் நேற்று (28) ஆராச்சிக்கட்டுவ ராஜகதளுவ கத்தோலிக்க மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. சிலாபம், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த பூதவுடல், நேற்று பிற்பகல் 01 மணியளவில் இறுதிக் கிரியைக்காக மும்மத சமய அனுஷ்டானங்கள், அரச

04

## சிறையிலிருந்து தப்பியோடிய கைதி பொலிஸாரால் கைது



வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து கையடக்க தொலைபேசியுடன் தப்பிச்சென்ற கைதி நேற்று பிலியந்தலை பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இரகசியமாக அந்த கைதி உபயோகித்துவந்த கையடக்கத் தொலைபேசியையும் எடுத்துக்கொண்டு கைதி

04

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



### அநுராதபுரம் மாவட்டத்திற்குள்...

## வீட்டுத்தோட்ட பயிர் உற்பத்திகள் தொடர்பில் ஆராய அரச அதிகாரிகள் கள விஜயம்

(திறப்பனை தினகரன் நிருபர் )

உலக உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்திற்குள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வீட்டுத் தோட்டப்பயிர் உற்பத்தியும் பாடசாலை போசணை வேலைத்திட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராயும் கள விஜயமொன்று அண்மையில் இப்பகுதியில் இடம் பெற்றது.

உலக உணவு வேலைத் திட்ட அதிகாரிகள் மற்றும் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயானந்த உடன் சென்ற அதிகாரிகள் குழு அங்கு புதிதாக ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள வீட்டுத் தோட்ட பயிர் உற்பத்திக்கான புதிய முறைகள் பற்றி ஆராய்ந்தனர்.

கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்திலுள்ள 43 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட பயிர் உற்பத்திக்கான உலக உணவு அமைப்பின் ஊடாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் கீழ் பயிர் உற்பத்திக்கு தேவையான எல்லா அனைத்து உதவிகளும் உலக உணவு அமைப்பின் ஊடாக வழங்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு தேவையான போஷாக்கான பகல் உணவுக்குரிய மரக்கறி வகைகளை இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வீட்டுத் தோட்ட பயிர் செய்கைக்கு மேலதிகமாக முட்டை உற்பத்தியை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கோழி வளர்ப்பை மேற்கொள்ள கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தில் உள்ள சுமார் 22 பயனாளிகளுக்கு தேவையான ஆரம்பகட்ட உதவிகளும் இதன் கீழ் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக 60 லட்சம் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது.



இவ் விஜயத்தின் போது திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயானந்த, கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் ஆர்.செந்தில் உலக உணவுத் திட்ட அநுராதபுரம் மாவட்ட இணைப்பாளர் அசங்க மனோஜ் உட்பட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

## சட்டவிரோதமாக சங்குகளை பிடித்த மூவர் கைது

### புத்தளம் கற்பிட்டி பகுதியில் சம்பவம்

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)



புத்தளம் கற்பிட்டி, இப்பந்தீவு பகுதியில் சட்டவிரோதமான முறையில் சங்குகளை பிடித்த மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான இலங்கை கடற்படை கப்பல் விஜய கடற்படையினரால் கற்பிட்டி இப்பந்தீவு கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட 1856 சங்குகளும் , டிங்கி இயந்திர படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான படகொன்று கற்பிட்டி, இப்பந்தீவு கடற்பகுதியில் இருப்பதை அவதானித்த கடற்படையினர், குறித்த படகினை சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, அனுமதிப்பத்திரமின்றி, சட்டவிரோதமாக சங்குகளை பிடித்துள்ளமை தெரியவந்துள்ளது.

## கம்பளிப்பூச்சி தாக்கத்தினால் 3,700 ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடையும் நிலை

### விவசாயிகள் கவலை

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

கம்பளிப்பூச்சியின் தாக்கத்தினால் அநுராதபுரம் நுவரவெவ நீர்த்தேக்க வலயத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள 3,700 ஏக்கர் நெற் பயிர்கள் அழிவடையும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். குறித்த கம்பளிப்பூச்சி தாக்கத்தினால் முழுமையாக வேளாண்மை மரங்களின் சாரத்தை உள்வாங்குவதன் காரணமாக அந்த வேளாண்மை மரங்கள் முழுமையாக அழிவடைந்துள்ளன. தற்போது 90 வீதமான நெல் சாகுபடி கம்பளிப்பூச்சியின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் இது தொடர்பில் பரிசோதனை செய்வதற்காக வருகை தந்த பத்தல்கொட நெல் ஆராய்ச்சி நிறுவனத்தினால் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர். அநுராதபுரம் நுவரவெவ, திஸாவெவ வசவாக்குளம் கல்நேவ, பலாகல மற்றும் கலென்பிந்துனுவெவ ஆகிய பகுதிகளிலும் குறித்த பூச்சியின் தாக்கத்தினால் நெல் சாகுபடிக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.





மொஹமட் அக்ரம் அறக்கட்டளையின் ஊடாக கொழும்பில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 500 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (27) மாளிகாவத்தை பிரதீபா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, இரத்தினபுரி மாவட்ட ஐ தே க அமைப்பாளர் எஸ் ஆனந்தகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர். படம் அஷ்ரப் ஏ சமட்

### அடைமழையினால்...

## ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2,492 பேர் பாதிப்பு; 682 பேர் இடம்பெயர்வு

(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அண்மையில் பெய்த அடைமழையின் காரணமாக 2,492 பேர் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாக மாவட்ட செயலாளர் எச். பீ. சுமனசேகர தெரிவித்தார்.

இதில் கூடுதலானோர் திஸ்ஸமகாராமை பிரதேச செயலகப் பிரிவிலேயே கூடுதல் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். இங்கு 1810 பேர் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். இவர்களில் 227 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் 682 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இம்முறை நீண்டகாலத்திற்குப் பிறகு ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள மிகவும் பழைமை வாய்ந்த பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதினால் தாழ்வான பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் இந் நிலைமை ஏற்பட்டதாகவும் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## மண்வெட்டி தாக்குதலில் மாமி பலி; மருமகன் தலைமறைவு

### கெப்பித்திகொள்ளாவவில் சம்பவம்

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

மனைவியின் தாயாரை (மாமியை) மண்வெட்டியால் தாக்கி கொலை செய்த சம்பவமொன்று கெப்பித்திகொள்ளாவ வாகல்கட பகுதியில் இடம்பெற்றுள்ளதாக வாகல்கட பொலிஸார் (26) தெரிவித்தனர்.

வாகல்கட பொலிஸ் பிரிவின் குடாகல்லிந்தவெவ கஹட்டகொள்ளேவ பகுதியிலுள்ள வீடொன்றில் வெள்ளிக்கிழமை நேற்றிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

54 வயதுடைய குடாகல்லிந்தவெவ கஹட்டகொள்ளேவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட பெண் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மகளின் கணவருடன் ஏற்பட்ட பிரச்சினையின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்றுள்ள நிலையில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பிரதேசத்திலிருந்து தப்பிச்சென்றுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்காக வேண்டி வாகல்கட பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சீனன்கோட்டை சிறுகதை எழுத்தாளர் பாயிஸாவின் கணவர் மறைவு



தர்கா நகரை பிறப்பிடமாகவும் பேருவளை, சீனன்கோட்டை சாதுலியா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மொஹமட் கைஸ் ஹாஜி நேற்று (28) சீனன்கோட்டை இல்லத்தில் காலமானார். சீனன்கோட்டையைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளர் ஜனாபா பாயிஸாவின் அன்புக்கணவரான இவர், மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். அன்னாரின் ஜனாஸா நேற்று இஷாத் தொழுகையின் பின்னர் சீனன் கோட்டை பாஸிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் ஜனாஸாவில் உலமாக்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

## புத்தளத்தில் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)



புத்தளம் ரத்மல்யாய வை.எம்.எம்.ஏ. நகர் சிட்டி போய்ஸ் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு (26) வை.எம்.எம்.ஏ. நகர் பள்ளிவாசல் வளாகத்தில் இடம்பெற்றது.

பரீட்சையில் சித்தி பெற்ற மாணவ மாணவிகளோடு புனித அல்குர் ஆனை மனனம் செய்த 03 ஹாபிழ்களுக்கும் சேர்த்து இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. இதன் போது, ரத்மல்யாய 618/B கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராமத்திலும் இருந்தும் இன, மத, மொழி வேறுபாடு இன்றி 60 மாணவ மாணவிகள் தங்களுக்கான விருதுகளை பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக மேர்சி லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் முனாஸ், முன்னாள் புத்தளம் நகர சபை உறுப்பினர் நகுலன், சமூக சேவையாளர் ஏ.எல்.எம். ஹமாசி, பொறியியலாளர் பாசில் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## பலாங்கொடையில் யுக்திய தேடுதல்களில் 188 பேர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடைப் பொலிஸ் பிரிவில்போதைப்பொருட்களுடன் சம்பந்தப்பட்ட 188 பேர் நேற்று கைது செய்ய ப்பட்டுள்ளனர். இவர்கள் சட்ட விரோத மதுபான உற்பத்தி மற்றும் ஐஸ், கேரள கஞ்சா, ஹெரோயின் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஐஸ் போதை பொருளுடன் 39 பேரும் கேரளா கஞ்சாவுடன் 58 பேரும் ஹெரோயின் போதைப் பொருளுடன் 4 பேரும் சட்டவிரோத மதுபானம் தயாரித்தல் விற்பனை செய்தல் தொடர்பாக 86 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் தடைசெய்யப்பட்ட சிகரெட்டுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாசப் பறவைகள் நூல் வெளியீட்டு விழா



விஜிபி நிறுவனத்தின் தலைவரும் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனருமான டாக்டர் வி.ஜி.சந்தோசம் எழுதிய “பாசப் பறவைகள்” என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. நல்லி சில்க்ஸ் தலைவர் பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி நூலை வெளியிட, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை ந. அருள் நூலின் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார். கவிதை உறவு ஆசிரியா் கலைமாமணி ஏா்வாடி இராதாகிருஷ்ணன், விஜிபி நிறுவனத்தின் இயக்குநா் விஜிபி ராஜாதாஸ், பேராசிரியா் உலகநாயகி பழனி ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

## மாத்தளையில் இரத்ததான முகாம்

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை சுபீட்சம் அமைப்பின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் ஒன்று மாத்தளை சர்வதேச மகாத்மா காந்தி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டவர்கள் இரத்ததான வழங்கினர். இங்கு இரத்த தானம் செய்ய வந்த ஒருவரான மாத்தளை பிரஜா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியந்த ஜயசேகர தனது 18 வயதில் இருந்து இதுவரை 70 தடவைகள் இரத்த தானம் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். மக்களின் நலன் கருதி 60 வயதில் பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெறும் போது நான் 100 தடவைகள் இரத்த தானம் செய்ய எண்ணியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.





பேருவளை, சீனன்கோட்டை தர்கா வீதியில் இயங்கும் அல் இஸ்லாஹ் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் எம்.எப்.எப். பர்ஸானா ஹில்மி தலைமையில் அண்மையில் அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம். ஜாபிர் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய அதிபர் எஸ்.ஆர். குமார் கலந்து சிறப்பித்தார். ஏனைய அதிதிகளாக கலந்துகொண்டோர் பாடசாலை சமூகத்தினால் வரவேற்கப்படுவதையும் வெற்றிபெற்ற மாணவிக்கு அதிபர் குமார் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஜனவரி 29 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்
சுபஹ் - 05.10
லுஹர் - 12.24
அஸர் - 03.47
மஃரிப் - 06.18
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் தை 15
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



"உறுதியான பொருளாதாரம் – வெற்றிகரமான பயணம்"

# நிமால் லான்சா, அனுர பிரியதர்ஷன சுசிலின் பங்கேற்புடன் புதிய கூட்டணி




"உறுதியான பொருளாதாரம் வெற்றிகரமான பயணம்" எனும் தொனிப்பொருளைக் கொண்ட புதிய கூட்டணியின் அங்குரார்ப்பண கூட்டம் நேற்று முன்தினம் (27) ஜாஎல நகரில் பெருந்திரளான மக்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

கூட்டணியின் செயற்பாட்டுத் தலைவர் அனுர பிரிய தர்ஷன யாப்பா, புதிய கூட்டணியின் ஸ்தாபகர் நிமல் லான்சா, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, புதிய கூட்டணியின் கம்பஹா மாவட்டத் தலைவர் நளின் பெனாண்டோ, ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபால அமரசிங்க, நீர்கொழும்பு முன்னாள் மேயர் தயான் லான்சா, சுகீஸ்வர ஸ்ரீ பண்டார, அசங்க ஸ்ரீநாத் உள்ளிட்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் பலர் இதில், கலந்து கொண்டனர். அத்துடன் சங்கைக்குரிய மகா சங்கத்தினர் உள்ளிட்ட சர்வ மதத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், கலைஞர்கள், சட்டத்தரணிகள், தொழில் வல்லுநர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பெருந்தொகையான ஆதரவாளர்களும் இதில், பங்கேற்றனர்.

# நாட்டை முன்னேற்றத் தேவையான சட்டங்களை நிறைவேற்றுவது அவசியம்

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்தன



உலக நாடுகளின் வளர்ச்சிக்கிணங்க நாட்டை முன்னேற்றுவதானால், சட்டங்கள் மற்றும் நியதிகளை நிறைவேற்றுவது அவசியமென ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளை முன்னேற்றுவதற்கு முன்பதாக முதலில், தாய்நாட்டை முன்னேற்றுவது அனைவரதும் பொறுப்பாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கூட்டத்தொடரை நிறைவு செய்துள்ளமை தொடர்பில் சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருவதாக குறிப்பிட்டுள்ள வஜிர அபேவர்தன எம்.பி. சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதார மாற்றங்கள் இறுதி இலக்கை அடைந்துள்ளது.

இதனால், இதுதொடர்பில் தேசிய கொள்கை வரைபு சம்பந்தமாக மீள பாராளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டியது அவசியமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டை முன்னேற்றுவதானால் அதற்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றுவதும் அவசியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கண்டியில் பாரிய அபிவிருத்திகள் ரூ.3,000 கோடி செலவில் திட்டம்

## இரண்டு வருடங்களுக்குள் பூர்த்தி



கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இரண்டு வருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாரிய கண்டி வேலைத்திட்டத்தின் கீழ், இதனுடன் தொடர்பான பல வீதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி நிதி வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பல வருடங்களாக பூர்த்தி செய்ய முடியாத நிலையில் காணப்பட்ட கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை, கடந்த 27 இல், ஆரம்பித்து வைத்த பின்னர் அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டி நகரில் காணப்படும் கடுமையான போக்குவரத்து நெரிசல் மற்றும் முறைசாரா தன்மையை இல்லாதொழிக்கும் வகையில் பேராதனை மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகங்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வுத் திட்டத்தின் படி இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இத் திட்டம் 2026 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

சுமார் 3,000 கோடி ரூபா செலவில், கண்டி பேராதனை வீதி மற்றும் கண்டி ரயில் நிலையம் மற்றும் குட்செட் பஸ் நிலையம் அருகில் சுமார் மூன்று ஏக்கர் நிலப்பரப்பை மையமாகக் கொண்டு இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டம், செயல்படும் போது ஒரே இடத்திலிருந்து அனைத்து பஸ் சேவைகளும் இயக்கப்படும். நாளொன்றுக்கு 193 இடங்களுக்கு, ஐயாயிரம் பஸ் சேவைகள் மூலம் சுமார் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் பயணிகளை கொண்டு செல்வது மற்றும் கையாள்வது இதன் நோக்கமாகும். தொண்ணூற்று நான்கு பஸ் வண்டி நிறுத்தங்கள், பதின்மூன்று காத்திருப்பு நிறுத்தங்கள், அவசர நிறுத்த நடவடிக்கைகள், நிர்வாக அலகு, ஓய்வு அறைகள், செயல்பாட்டு வளாகங்கள், மோட்டார் வண்டிகள், முச்சக்கர வண்டிகள் நிறுத்துமிடங்கள், உள்ளிட்ட பல பிரிவுகளைக் கொண்ட மூன்று அடுக்கு முனையம் இதன்படி அமைக்கப்படும்.

2028 இல் ஆட்சியமைக்க எதிர்பார்ப்பவர்கள் 14 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் சர்வதேச கையிருப்பை வைத்திருக்க வேண்டும் என்றும், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி இல்லாமல் இந்த நாட்டை எவராவது காப்பாற்றுவார்கள் என்று கூறுவது முட்டாள்தனமான கருத்து என்றும் கூறினார்.

இந்த நிலைமையை புரிந்து கொண்டு வீழ்ந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பழைய தவறுகளை செய்யாமல் இந்த நடைமுறை யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாடு பொருளாதார ரீதியாக சிறந்து விளங்கும் போது கண்டியை மையமாக கொண்டு மத்திய மாகாணத்தில் எஞ்சிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி நகரை மாற்றியமைக்கும் பாரிய செயற்திட்டமொன்றை ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சியடைவதாகவும், ஒரு நாடாகவும் தேசமாகவும் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# விளையாட்டுத்துறையின் இரண்டு இடைக்காலக் குழுக்கள் கலைப்பு

## அதி விஷேட வர்த்தமானி வெளியீடு



விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட இரண்டு இடைக்கால குழுக்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கலைக்கப்பட்டுள்ளது. அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ இதற்கான அதிவிசேட வர்த்தமானியை நேற்று வெளியிட்டார்.

இந்த வர்த்தமானிக்கிணங்க சட்டபூர்வமான பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர், மீண்டும் தேர்தலை நடத்தும் வரை அந்த சங்கங்களின் முன்னைய நிர்வாக சபைக்கு இதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை கராத்தே சம்மேளனம் மற்றும் இலங்கை மோட்டார் வாகன விளையாட்டுப் பிரிவு என்பவற்றுக்கு நியமிக்கப்பட்ட இரண்டு இடைக்கால குழுக்களே இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சரினால் கலைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் 1973 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, விளையாட்டுத்துறை மற்றும் விளையாட்டுத்துறை நியதிகளுக்கு அமைய, இந்த அதிகாரங்கள் அமைச்சருக்கு மீள வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



காலஞ் சென்ற மீகொட பிக்குகள் தியான நிலையத்தின் பணிப்பாளர், அதி வணக்கத்துக்குரிய கவிதஜாபிவங்ச, ஸ்ரீ சதர்ம வாகீஸ்வர, கம்மட்டாதனாச்சார்யா, கொழும்பு தொகுதி, பிரதி பிரதம சங்க நாயக்கர், சமாதான நீதவான், தேசகீர்த்தி, இலங்கை இராணுவ பௌத்த அதிகார சபை தலைமை ஆலோசகர் வணக்கத்துக்குரிய பில்லஸ்ஸே விமலதஜ நாயக்க தேரரின் இறுதி கிரியைகள் மீகொட தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. அங்கு இரங்கல் உரையை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன நிகழ்த்தியதுடன் தேரரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியபோதுபிடிக்கப்பட்ட படம்.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 160,000 மில்லியனுக்கான திறை சேரி உண்டியல்கள் 2024 ஜனவரி 31ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124E033 | LKA18224H025 | LKA36425A310 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 40,000 | 70,000 | 50,000 | 160,000 |

ஏல விற்பனைத் திகதி : 2024 ஜனவரி 31
தீர்ப்பனவுத் திகதி : 2024 பெப்ரவரி 02
வழங்கப்படும் திகதி : 2024 பெப்ரவரி 02
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஜனவரி 31, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்படவேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ. பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# மாதிவெல வீட்டிலிருந்து வெளியேறுமாறு ஐ.ம.ச முன்னாள் எம்பிக்கு அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாதிவெல எம்.பிக்களுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை காலி செய்யுமாறு அறிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, தனிப்பட்ட காரணங்களுக்காக அண்மையில் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது பதவியை இராஜினாமா செய்த பின்னர், அவர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேற ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படும். இதன்படி சமிந்த விஜேசிறி அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாதிவெல வீட்டிலிருந்து வெளியேற வேண்டுமென பாராளுமன்றம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# சுதந்திர தின கொண்டாட்டங்கள் கொழும்பில் விசேட போக்குவரத்து

நாட்டின் சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி காலி முகத்திடலில் நடைபெறவுள்ளது. இதையடுத்து, இதற்கான விசேட போக்குவரத்து திட்டங்கள் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளன.

காலி வீதி, கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து காலி முகத்திடல் வரை மற்றும் செராமிக் சந்தியிலிருந்து காலி முகத்திடல் வரையான வீதிகள் போக்குவரத்துக்காக மூடப்படுமென பொலிஸார் அறிவித்துள்ளனர். எதிர்வரும் 29 முதல் பெப்ரவரி 02 வரை காலை 6.00 மணி முதல் 8.30 மணி வரையிலும், முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரையிலும் இவ்வீதிகள் மூடப்படவுள்ளன.

பெப்ரவரி 03ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி முதல் பெப்ரவரி 04ஆம் திகதி சுதந்திர தின நிகழ்வு நிறைவடையும் வரை, காலி வீதி கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து காலி முகத்திடல் வரை மற்றும் செராமிக் சந்தியிலிருந்து காலி முகத்திடல் வரையான வீதிகள் மீண்டும் மூடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளி 2024.01.26
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5371 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 35,049,000.00
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 8 5 9 7 8 0

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3613 — சீட்டிழுப்பு திகதி 2024.01.26 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,667,709.12
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 03 08 10 64 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 67393

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1719 — 2024.01.26 — 97396 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 421,956,138.00
ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 42 49 57 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP** — திகதி 2024.01.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0197
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 6 2 9 4 9 9
L7 எழுத்து J
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 24,013,728.12

**ராசி சுப பலன்** — திகதி 2024.01.26 — சீட்டிழுப்பு இலக்கம் 680 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,619,933.64
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 18 27 44 45 — தனயோக இலக்கம் 15267 — நாளுக்கான விதி எண் 07

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1401 — 2024.01.26 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 132,399,398.48
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 05 12 42 73 — விசேட எழுத்து N — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 54162

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2024.01.27
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5372 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 35,184,400.00
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 2 8 8 6 8 7

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3614 — சீட்டிழுப்பு திகதி 2024.01.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,836,841.12
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 12 15 50 69 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 86955

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1720 — 2024.01.27 — 52783 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 422,125,718.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 05 25 47 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP** — திகதி 2024.01.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0198
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 0 7 2 3 2 9
L7 எழுத்து S
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 24,100,150.92

**ராசி சுப பலன்** — திகதி 2024.01.27 — சீட்டிழுப்பு இலக்கம் 681 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,630,527.04
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 05 24 37 55 — தனயோக இலக்கம் 27221 — நாளுக்கான விதி எண் 12

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1402 — 2024.01.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 132,658,671.28
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 34 65 75 80 — விசேட எழுத்து O — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 02481

## ஜனாதிபதி நிதியத்தில்...

பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இதுவரை 10 மாதாந்த தவணைகள் இவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, புலமைப்பரிசில் தொகை அதிகரிப்புடன், 2024 பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6,000 ரூபா மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும் 2022/2023 ஆண்டு தொடர்பாக க.பொ.த சாதாரண தர பரீட்சையில் உயர் தேர்ச்சி பெற்ற 5,000 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த மாணவர் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வரை மாதாந்தம் ரூ. 6,000 தொகையை

வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நாட்டின், சகல மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தற்போது பிராந்திய மட்டத்தில் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தெரிவுகள் நிறைவடைந்தவுடன் உரிய மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான புதுப்பிக்கப்படும் தகவல்களை எதிர்காலத்தில் அறிந்து கொள்வதற்கு, ஜனாதிபதி நிதியத்தின் www.facebook.com/president.fund என்ற உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தை மற்றும் உத்தியோகபூர்வ YouTube சேனலான www.youtube.com/@PresidentsFund ஐ like/follow அல்லது subscribe செய்யுமாறும் www.presidentsfund.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

## இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவின்...

தலைவர்களின் உரைகளின் பின்னர் வாகன பேரணியாக எடுத்துச் செல்லப்பட்டு ஆயிரக்கணக்கானோர் மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன , பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உட்பட அரச திணைக்கள பிரதானிகளும், முப்படையினரும் கலந்து கொண்டனர்.

பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்றுக் காலை ஆராச்சிக்கட்டுவ பகுதிக்கு வருகை தந்து, இராஜாங்க அமைச்சரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன, வடமேல் மாகாண ஆளுநர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் அனுதாப செய்திகளும் இந்த இறுதி கிரியையின் போது வாசிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் அனுதாப செய்தியை ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தணவும், பிரதமரின் அனுதாப செய்தியை இராஜாங்க அமைச்சர் அசோக பியந்தவும், வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவின் அனுதாப செய்தியை புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயதுன்ன ஆகியோரும் வாசித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி இறுதி கிரியை நிகழ்வில் பங்கேற்ற போதிலும் அவரது சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அனுதாப செய்தியை வாசித்தார்.

இவ்வாறு வாசிக்கப்பட்ட அனுதாப செய்திகள் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவின் மனைவி சட்டத்தரணி சமரி பெரேவிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இராஜாங்க அமைச்சர் அருந்திக பர்னாந்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் சாகல காரியவசம் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா தொடர்பில் தங்களது அனுதாபங்களை தெரிவித்து உரையாற்றினார்கள்.

இந்த இறுதி கிரியைகள் நிகழ்வில் புத்தளம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினார்கள்.

இதன்போது, இராஜாங்க அமைச்சரின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த ஆராச்சிக்கட்டுவ இல்லத்தைச் சுற்றி பொலிஸாரும், படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும், புத்தளம் சிலாபம் பிரதான வீதியின் ஆராச்சிக்கட்டுவ பகுதியில் வாகன நெரிசலை கட்டுப்படுத்த சில இடங்களில் வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன.

கட்டுநாயக்க அதிவேக வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரும் உயிரிழந்தனர். மேலும், இராஜாங்க அமைச்சரின் வாகன சாரதி படுகாயமடைந்த நிலையில், ராகம வைத்தியசாலகயில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பு நோக்கி இராஜாங்க அமைச்சர் பயணித்த சொகுசு வாகனம், அதே திசையில் சென்ற கொள்கலன் லொறி ஒன்றின் பின்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

சனத் நிஷாந்தவின் பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் ஆராச்சிக்கட்டுவ பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய தினம் ஆயிரக்கணக்கான பொதுமக்களின் கண்ணீருக்கு மத்தியில் அன்னாரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பு...

பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். எனவே, மக்கள் அர்த்தமற்ற மாயைகளை தொடர்ந்தும் நம்பியிராமல்,தீர்வுகளை அடைவதற்கான நடைமுறைச் சாத்திய முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்து வரும் தாக்குதல் தொடர்பாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில், தென்னாபிரிக்கா தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்புத் தொடர்பாக கருத்து தெரிவித்த போதே, அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கடந்த 14 வருடங்களுக்கு மேலாக சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு நீதி பெற்றுத் தரப்படும் என்ற கோஷங்களை சில தமிழ் தரப்புக்கள் தூக்கிப்பிடித்து வருகின்றன.

இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற உயிரிழப்புக்களுக்கான நீதி மற்றும் காணாமல் போனோருக்கான பரிகாரம் போன்றவற்றை சர்வதேச நீதிமன்றத்தின் மூலமே பெற்றக்கொள்ள முடியும் எனவும் உள்நாட்டு பொறிமுறையில் நம்பிக்கை கொள்ள முடியாதெனவும் இத்தரப்புக்கள் கூறுகின்றன. சர்வதேச நீதிமன்றம் தொடர்பான மாயையை தமிழ் மக்கள் மத்தியில் இந்த அரசியல்வாதிகள் ஏற்படுத்தி இருக்கின்றனர்.

இஸ்ரேல் விவகாரத்தில், சர்வதேச நீதிமன்று வழக்கியுள்ள தீர்ப்பு, சர்வதேச நீதிமன்றத்தின் சிந்தனை மற்றும் பார்வை எத்தகையது என்பதை வெளிப்படுத்தி உள்ளது.

ஆயிரக்கணக்கான மக்களை தினமும் அழித்துக் கொண்டிருக்கிற தாக்குதல்களை நிறுத்துமாறு உலகின் அதியுச்ச நீதிமன்றக் கட்டமைப்பான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிடவில்லை. இனப்படுகொலை மற்றும் யுத்த குற்றம் தொடர்பான சர்வதேச நியமங்களை மதித்து நடக்குமாறே தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது.

காஸாவில் குறுகிய பிரதேசத்தில் பல இலட்சம் அப்பாவி மக்கள் செறிந்து வாழ்கிறார்கள் என்பதோ, தாக்குதல் தொடர்ந்தால் அப்பாவி மக்களின் அழிவுகள் தவிர்க்க முடியாதவை என்பதோ சர்வதேச நீதிமன்றத்துக்கு தெரியாத சமாச்சாரங்கள் இல்லை.

அப்படியிருந்தும் தாக்குதலை நிறுத்துமாறு தீர்ப்பில் சொல்லப்படவில்லை. இவ்வாறான சம்பங்கள் ஊடாக, சர்வதேச கட்டமைப்புக்களின் மனோநிலையையும் அவற்றின் நிகழ்ச்சி நிரல்கள் எத்தகையவை என்பதையும் எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.

## வெளிநாடுகளின் தேவைகளுக்காக...

மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டில் சட்டங்களை முன்வைப்பது எமது நாட்டுக்கு பொருத்தமான வகையிலேயன்றி சர்வதேசத்துக்கு தேவையான வகையிலல்ல.

யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் போதைப்பொருள் பகிர்ந்தளிக்கும் நபர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், எம்மிருவருக்கும் தொடர்ச்சியான தடைகள் பல்வேறு வகைகளிலும் ஏற்படுத்தப்படுகின்றன. அவற்றுக்கு முகங்கொடுத்து வரும் நிலையிலேயே, மேற்படி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

சட்டத்தரணிகள் உள்ளிட்ட போதைப்பொருள் வர்த்தகர்களின் பணத்தில் தங்கிவாழும் தரப்பினர், இந்நடவடிக்கையை சீர்குலைப்பதற்கு பல்வேறு வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

சமூகவலைத்தளங்கள் மூலம் பெரும் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்கள், சில பிரதிநிதிகளுடன் இணைந்து சர்வதேசத்துக்கு அது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் மேற்கொள் கின்றன.

அந்தவகையில் கடந்த சில தினங்களுக்கு முன் ஐக்கிய நாடுகள் சபை மூலம் இந்த நடவடிக்கையை நிறுத்துமாறு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், நாட்டில் பெரும்பாலான மக்கள் இந்த நடவடிக்கையை நிறுத்தவேண்டாம் என்றே வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இது எமது நாடு. எமது நாட்டில் நாம் எமக்குத் தேவையான வகையிலேயே சட்டங்களை ஏற்படுத்துகின்றோம். அவ்வாறில்லாமல் சர்வதேசத்துக்குத் தேவையான வகையிலல்ல. நான் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகிக்கும் வரை சர்வதேசத்திற்கு தேவையான வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதில்லை.

போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் குற்றவாளிகளின் எந்த அழுத்தங்களுக்கும் அடிபணிந்து நாம், இந்த வேலைத்திட்டத்தை நிறுத்தப்போவதில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு IMF...

உருவாக்கப்பட்ட இக்கட்டமைப்பானது, பொருளாதாரக் கட்டுப்பாடுகளை முறையாகப் பகுப்பாய்வு செய்ய உதவும் ஒரு விரிவான கருவியாகும்.

இந்தத் தடைகளை மிகவும் திறம்பட நீக்கி , வளர்ச்சியைத் தூண்டும் கொள்கைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதில் அரசாங்கத்துக்கு உதவுவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் சட்டத் துறையின் துணைப் பிரிவுத் தலைவர் *Joel Turkewitz*, கட்டமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். "இது சவால்களை அடையாளம் காண்பது மட்டுமல்ல, இலங்கையின் தனித்துவமான பொருளாதார நிலப்பரப்புடன் எதிரொலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட உத்திகளை உருவாக்குவதுமாகும்," என்று அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகளான பீட்டர் ப்ரூவர் மற்றும் ஜோயல் டர்ர்க்விட்ஸ் ஆகியோருடன் அட்வகேட்டா தலைவர் முர்தாசா ஜாஃபர்ஜியும் கலந்து கொண்ட அட்வகேட்டா ஸ்டுடியோவின் அண்மைய தொடரில் (ஜனவரி 21) இந்த விடயம் முக்கியப்படுத்தப்பட்டது. முக்கியமான பொருளாதாரப் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதில் இலங்கையின் முன்முயற்சி அணுகுமுறையை இந்த அட்வகேட்டா கலந்துரையாடல் விளக்கியது.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூவர், சீர்திருத்தம் மற்றும் அபிவிருத்திக்கான நாட்டின் அர்ப்பணிப்பு குறித்து நம்பிக்கை தெரிவித்துள்ளார். IMF பிரதிநிதிகள் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

## இரண்டு முனையங்களில் மாத்திரம்...

அதிகரித்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் இயக்கத் திறன் நிலைமையைக் கண்காணிப்பதற்காக நேற்று முன்தினம் அமைச்சர் நிமல்சிறிபாலடி சில்வா விஜயம் செய்தார். இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஜெயபாலு முனையத்தில் விசேட கண்காணிப்பில் ஈடுபட்ட அமைச்சர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர் சூழ்நிலை காரணமாக, செங்கடல் வழியான பயணம், சூயஸ் கால்வாய் வழியாக மேற்கொள்ளப்படுகிறது. வணிகக் கப்பல்களுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளதால், அவற்றை பாதுகாக்கும் நடவடிக்கைள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. கொள்கலன்களை கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டு வர கப்பல் நிறுவனங்கள் விரும்புகின்றன. இதன்காரணமாக தற்போது துறைமுகத்தில் 24 கப்பல்கள் நிறுத்தும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## அதிக வட்டி தருவதாக கூறி...

நிறுவனத்தில் நிதியை முதலீடு செய்துள்ள நபர்கள் கடந்த ஜுலை 11 ஆம் திகதி கலன்பிந்துனுவெவ நகரில் ஆர்ப்பாட்டமொன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

1,000 க்கும் மேற்பட்டோர்களின் நிதியை இவ்வாறு இவர் மோசடி செய்துள்ளதுடன், பல மாதங்களாக அவரால் நடத்தப்பட்டு வந்த நிறுவனத்தையும் மூடியிருந்தார்.பின்னர், கலன்பிந்துனுவெவ அஸ்ஸயாபெந்திவெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட பஸ்நாயக்க நிலமே என, தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு அப்பிரதேசத்திலி ருந்து இவர்,தலைமறைவாகியுள்ளார்.

மாத்தறை பிரதேசத்தில் பிரபலமான விஹாரையொன்றின் பஸ்நாயக்க நிலமேயாக இவர் பதவி வகித்துள்ளதாகவும் சந்தேகநபர் பிரதேசவாசிகளிடம் தெரிவித்துள்ளார்.

அந்த நம்பிக்கையிலேயே மக்கள் அவரது நிறுவனத்தில் பணத்தை வைப்புச்செய்துள்ளனர்.

இவருடன் தகாத உறவு கொண்டிருந்த பெண் ஒருவரின் பெயரில், 80 இலட்சம் ரூபாவை நிலையான வைப்பிலிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்பெண்ணையும் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர் .

## கூட்டுக் கடற்படையணியுடன்...

விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார். ஆறு மீனவர்களுடன் இலங்கையின் ஆழ் கடல் மீன்பிடிப் படகு கடத்தப்பட்டுள்ளமை தொடர்பில், கடற்தொழில் திணைக்களம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இதையடுத்தே மேற்படி இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கடற் படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த (12) லொரென்ஸோ புதா 4 என்ற பெயருடைய இந்த ஆழ்கடல் மீன் பிடிப்படகு சென்றுள்ளது.

அந்தப் படகையும் ஆறு மீனவர்களையும் சோமாலிய கடற் கொள்ளையர்கள் கடத்தப்பட்டுள்ளது.

## இலங்கை தமிழரசு கட்சியின்...

திருகோணமலை ஜேக்கப் பீச் றிசோட்டில் நேற்று (28) நடைபெறவிருந்தது. எனினும், இம்மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டம் அதன் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜாவின் தலைமையில் நேற்று முன்தினம் (27) திருகோணமலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மத்திய குழுவால் நியமிக்கப்பட்ட கட்சிக்கான பதவிக்கு நியமிக்கப்பட்டவர்களை, புதிய தலைவர் சிவஞானம் சிறிதரன் அறிவித்தார்.

இதன்போது சிலர், புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திருகோணமலையைச் சேர்ந்த சண்முகம் குகதாசனின் நியமனத்தை ஏற்றுக் கொள்ள மறுத்ததால் கட்சிக்காரர்களிடம் வாக்குவாதம் ஏற்பட்டது. பொதுச் செயலாளர் பதவிக்கு மட்டக்களப்பைச் சேர்ந்த ஞானமுத்து சிறிநேசன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சேவையர் குலநாயகம் மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த சண்முகம் குகதாசன் ஆகியோர் செயலாளர்களுக்கு விருப்பம் தெரிவித்தனர்.பின்னர், மூவரும் சேர்ந்து குகதாசனைத் தெரிவு செய்ததாக கட்சியின் புதிய தலைவர் தெரிவித்தார்.

இந் நிலமையை கருத்தில் கொண்டு கட்சியின் மாநாட்டுக்கான திகதி, ஒரு வாரத்தின் பின் நடைபெறவுள்ள மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கமைவாக அறிவிக்கப்படும் என யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்
### (29.01.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
வாழ்க்கைத் துணையின் படிப்புக்கு ஏற்ற வேலைக்கு முயற்சி செய்திருந்தால் அது கிடைக்கும். உதிரி வருமானங்கள் உண்டு.

**ரிஷபம் :**
என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கி போட்ட இடம் இப்பொழுது அதிக விலைக்கு விற்று பெரும் தொகை கைகளில் புரளும்.

**மிதுனம்:**
தொழிலில் ஏற்பட்ட தொய்வு அகலும். பதவியில் இருப்பவர்கள் உங்களுக்கு பக்க பலமாக இருந்து உதவுவர்.

**கடகம்:**
சொந்தத் தொழிலில் முக்கிய பணியை நிறைவேற்ற அலைச்சலை சந்திப்பீர்கள். கூட்டுத் தொழிலில் போட்டிகளும் வியாபாரத்தில் தொய்வு ஏற்படக்கூடும் .

**சிம்மம்:**
தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புனித பயணங்களும் அதிகரிக்கும். ஒற்றுமை பலப்படும்.

**கன்னி:**
தாய் வழி ஆதரவு திருப்தி தரும். செல்வாக்கு பெற்ற நண்பர்கள் மூலம் உங்கள் செயல்பாடுகளில் இருந்த தடைகளை அகற்றி கொள்வீர்கள்.

**துலாம்:**
மன உறுதி அதிகரிக்கும். நீங்கள் தேர்ந்தெடுத்த களம் எதுவாக இருந்தாலும் அதில் முன்னேற்றம் கிட்டும்.

**விருச்சிகம்:**
ஆடை ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். திருமணம் போன்ற சுப காரியங்கள் நடைபெற வழி பிறக்கும்.

**தனுசு:**
உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் ஏற்படும். வீண்பழிக்கு ஆளாக நேரிடும். முன்னேற்ற பாதையில் ஒரு சில குறுக்கீடுகள் வந்து சேரும்.

**மகரம்:**
தைரியமும் தன்னம்பிக்கையும் கை கொடுக்கும். உத்யோகத்தில் பணி புரியும் இடத்தில் சக பணியாளர்களால் சில பிரச்சனைகள் உருவாகலாம்.

**கும்பம்:**
இதுவரை கடின முயற்சி செய்தும் எளிதில் முடிவடையாத காரியங்கள் இப்பொழுது எளிதில் முடிவடையும்.

**மீனம்:**
பணிபுரியும் இடத்தில் அதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். உங்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம்.

## 61 தோட்டாக்களுடன்...

தோட்டாக்களை அனுமதிப்பத்திரமின்றி வைத்திருந்ததாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவரை பிலியந்தலை கடம்புவான பிரதேசத்தில் வைத்து மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்த தாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடையவராவார்.சந்தேக நபரை கெஸ்பேவ மாஜிஸ்திரேட் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை கிரிக்கெட்டின்...

கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இடம்பெறுவதாக தெரிவித்து கடந்த வருடம் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலினால் இலங்கைக்கு எதிராக இந்த தடை விதிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் கிரிக்கெட்டுக்கான அங்கத்துவத்தை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நிறுவன கட்டமைப்பின் கீழான...

காலி கோட்டையில் அமைந்துள்ள அரச நிறுவனங்கள், அலுவலகங்களை காலி கோட்டைக்கு வெளியே கொண்டு வருவதற்கான செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெற்று வருவது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

காலி நகரத் திட்டத்தை அமுல்படுத்துவதில் நகர அபிவிருத்தி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம் மற்றும் ஏனைய அனைத்து நிறுவனங்களையும் ஒரே நிறுவனக் கட்டமைப்பின் கீழ் செயற்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இப்பகுதி சுற்றுலாத்துறை ஊக்குவிப்புக்கான திட்டங்களை துரிதப்படுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு அவர்களின் கருத்துக்களையும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

அருகில் உள்ள கடைக்கு சென்று கடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, காலி கோட்டையின் அபிவிருத்தி தொடர்பில் அவர்களின் கருத்துக்களையும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

## கடத்தப்படவிருந்த பீடி இலைகள்...

ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி பகுதியிலிருந்து இலங்கைக்கு பீடி இலை கடத்தப்படுவதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து,கண்காணிப்புக்கள் பலப்படுத்தப் பட்டன. இதன்போது,சிலுவைப்பட்டியிலிருந்து கடற்கரை செல்லும் சாலையில் சந்தேகிக்கும் வகையில் வந்த ஒரு மினி லொறியை காவல் துறையினர் சோதனையிட்டனர். இதில் தலா 35 கிலோ எடையுள்ள 76 மூடைகளில் 2,660 கிலோ பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இதேபோல், மோட்டார் சைக்கிளில் பண்டல்களுடன் வந்த நபரையும் பொலிஸார் மடக்கிப்பிடித்தனர். மோட்டார் சைக்கிளை பொலிஸார் சோதனையிட்டவேளை , சுமார் 57 ஆயிரம் ப்ரீகேப் 150 மி.கி. ( Pregab 150 Mg ) என்ற வலி நிவாரணி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில்,கடற்கரை பகுதியில் ஒரு டாரஸ் லொறி மற்றும் 03 மோட்டார் சைக்கிள்களில் தலா 35 கிலோ எடை கொண்ட 76 மூடைகளில் பீடி இலைகள் இருந்தன. இலங்கையில் இதன் மொத்த மதிப்பு (இந்திய பெறுமதி) 50 இலட்சம் ரூபா என்று கூறப்படுகிறது.

## சிறையிலிருந்து தப்பியோடிய...

தப்பிச்சென்றதாக, சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாண புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின்படி, அவரை பிலியந்தலை நிவன்திட்டிய பகுதியில் வைத்து கைதுசெய்ய முடிந்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 12 ஆம் திகதி ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றத்துக்காக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் படி சிறையிலடைக்கப்பட்டிருந்தார். அவரது தண்டனைக் காலம் நிறைவடைவதற்கு இன்னும் சில தினங்களே உள்ள போதும் அவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கின் குரல்

## பொத்துவில் பிரதேச உட்கட்டுமான பணிகளை விரைவில் முன்னெடுக்க நிதி

(ஒலுவில் விசேட நிருபர்)



பொத்துவில் பிரதேசத்தில், வெள்ளத்தால் சேதமடைந்துள்ள உட்கட்டமைப்புகளை மீள் நிர்மாணம் செய்வதற்கு, நிதி ஒதுக்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும், பொத்துவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத். தலைவருமான எஸ். எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் வெள்ளிக்கிழமை (26) பொத்துவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே முஷரப் எம்பி, மேற்கண்டவாறு கூறினார். இங்கு உரையாற்றிய முஷாரப் எம்பி:

பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், சரியான முறையில் மக்களிடம் சென்றடைய அதிகாரிகள் செயற்பட வேண்டும். மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படும் இக்கூட்டங்கள்,மக்களுக்கு பயனளிக்காவிடின் கூட்டங்களை கூட்டுவதில் பயனில்லை.

அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும். கடந்த வருடம் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது.

இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி தொடர்பான முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

பொத்துவில் பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட சேத விபரங்கள், குறிப்பாக விவசாய நீர்ப்பாசன உட்கட்டுமானங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் விரிவாக ஆராயப்பட்டன. அனர்த்தங்களை எதிர்கொள்ளும் முன்னாயத்த திட்டங்கள் மற்றும் சேதமடைந்த உட்கட்டமைப்புக்களை மீள்நிர்மாணம் செய்தல் உள்ளிட்டவை தொடர்பிலும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

## கல்முனையில் கடும்மழையால் நன்னீர் மீன்களுக்கு தட்டுப்பாடு

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

கல்முனைப் பிரதேசத்தில் நன்னீர் மீன்களுக்கு க்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் பெய்த அடைமழையால் நன்னீர் மீன்பிடிக் குளங்கள் நிரம்பி, நீர் வாழைகள் நிறைந்திருந்தன. இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்திருந்தனர். இதனால்தான்,நன்னீர் மீன்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

செப்பலி, விரால், பொட்டியான், சுங்கான் மற்றும் சாவாளை ஆகிய சத்துள்ள மீன்களுக்கே தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால், கல்முனை மேற்கு நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிட்டங்கி தாம்போதிக் குளத்தை நம்பி தொழில் புரியும் நூற்றுக்கணக்கானோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடைமழை காலத்தில் ஒரு கிலோ செப்பெலி மீன் ஆயிரம் ரூபாவுக்கு இங்கு விற்பனை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

தூரப் பிரதேசங்களான காரைதீவு, மாவடிப்பள்ளி, சாய்ந்தமருது, கல்முனை மருதமுனை, பெரிய நீலாவணை பிரதேச மக்கள் கிட்டங்கிக்கு வருகை தந்து நன்னீர் மீன்களை கொள்வனவு செய்வது வழக்கமாகும்.

பாண்டிருப்பு கல்முனை மாவடிப்பள்ளி சாய்ந்தமருது பிரதேச வியாபாரிகளும் இங்கிருந்தே மீன்களை கொள்வனவு செய்து வந்தனர்.இது குறித்து மீனவர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், முழு ஆற்று வாழையும் அகற்றப்பட்ட பின்னரே தொழிலை மீள் ஆரம்பிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

மேலும், மீன்களை விற்கக் கூடிய சந்தைக் கட்டிடத்தை அமைத்து தருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரி மாணவர்களை பாராட்டும் விழா



(ராஜகிரிய குறூப் நிருபர்)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரி மாணவர்களை பாரட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் எம்.ஏ. எம். பஜீர் தலைமையில் மிக விமர்சையாக நடைபெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸ் தலைவருமான ஏ. எல். எம். அதாஉல்லா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். மாணவர்களைப் பாராட்டும் இவ்விழா மாண்புறு விழா என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றது.

## லொறி விபத்து இருவர் காயம்

(கந்தளாய் தினகரன் நிருபர்)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேராறு சேருநுவர பிரதான வீதியில், சிறிய ரக லொறியொன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இதில் சாரதி உட்பட இருவர் பலத்த காயங்களுக்குள்ளானதாக சேருநுவர பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்விபத்துச் சம்பவம் (27) அதிகாலை இடம்பெற்றது.

பேராறு பகுதியிலிருந்து சேருநுவர பிரதான வீதியை கடக்க முற்பட்ட இந்த லொறி, அருகிலிருந்த ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளான லொறியின் உரிமையாளரும் அவரது சிறிய மகனும் மயிரிழையில் உயிர்தப்பினர்.

இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாணவர்களை நூலகங்களுடன் இணைக்கும் செயற்றிட்டம்



(இறக்காமம் தினகரன் நிருபர்)

மாணவர்களை நூலகங்களுடன் இணைக்கும் செயற்றிட்டத்தை அக்கரைப்பற்று பிரதேச சபை அலிஉதுமான் பொது நூலகம் மேற்கொண்டு வருகிறது.

மாணவர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கம் அருகி வரும் இக்காலகட்டத்தில்,இச்செயற்பாடுகள் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளன.

அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எல். எம். இர்பான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ. எம். முஹம்மது அன்ஸார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது அக்கரைப்பற்று பிரதேச சபையின் நூலகர் ஏ. கே. ஜௌபரின் நெறிப்படுத்தலில் புத்தகக் கண்காட்சி, சிறுவர் நூலக பிரிவு, கண்பார்வை இழந்தவர்களுக்கான தொடுநர் பிரிவு மற்றும் இணைய வழி கற்கைப் பிரிவு ஆகியவையும் திறந்து வைக்கப்பட்டன.

## E-Business யில் இந்தியா வரை கொடிகட்டி பறக்கும் சட்டத்தரணி மாணவன்




ஒரு தனிமனிதனாக இத்தனை துறைகளில் தடம் பதிக்க முடியுமா?? ஆம் அத்தகைய வினாவுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தவரும், பலருக்கு முன்னோடியாகவும் இருந்து பல தடைகள் கடந்து இன்றுவரை பயணித்துக் கொண்டிருப்பவர் தான் இந்த முஹம்மட் அஸ்பர். அறிவும் திறமையும் எல்லோருக்கும் ஒரே விதமாக அமைவதில்லை. ஆனாலும் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கிய **இளம்** வயது சாதனையாளர். இவர் தனது இளவயதில் **(20வயதிலேயே)** UPBRIGHT எனும் நிறுவனத்தை நிறுவி தற்போது வரை அதன் தலைசிறந்த CEO (தலைமைநிர்வாகி) யாக திகழ்கிறார்.



இதனை அங்கீகரிக்கும் வகையில் சகோதர நாடான இந்தியாவில் மிகப் பெரிய பிரசித்தி பெற்ற **Behindwoods** ஊடகத்தில் **"எதிர் நீச்சல்"** நிகழ்ச்சியில் நேர்காணல் (interview) காணப்பட்ட இலங்கையின் முதல் இளம் CEO என்பது UPBRIGHT க்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியே. எந்த விதப் பின்புலமும் இன்றி **மிகச் சாதாரணமான** ஒரு குடும்பத்தில் பிறந்த இவர் ஆரம்பக் கல்வி முதல் பொதுச் சாதாரண தரம் வரை சொந்த ஊரான ஓட்டமாவடியில் சாதாரண ஒரு பாடசாலையிலே கல்வி கற்று வந்துள்ளார். பின்னர் உயர் கல்விக்காக மருதமுனையில் ஒரு பாடசாலையைத் தேர்ந்தெடுத்து அங்கு கல்வியைத் தொடர்ந்தார். சாதாரண தரத்தில் (O/L) இவர் எந்த வித அதி உயர் A சித்திகளைப் பெறாத போதிலும் உயர் தரத்தில் தனது கடின உழைப்பால் உயர்தர பரீட்சையில் மாவட்ட ரீதியில் 36வது இடத்தை தகவல் தொழில்நுட்ப துறையில் (ICT) பெற்று களனி பல்கலைக்கழகத்திற்கும் தெரிவான இவர் தனி மனிதனாக **இரண்டு துறைகளில்** தடம் பதித்துள்ளார். அதாவது பல்கலைக்கழக கல்வியைத் தொடர்ந்தவாறே தனக்கான ஒரு வணிகத்தை **UPBRIGHT** எனும் பெயரில் ஆரம்பிக்கிறார் (2020.08.25). தான் e-commerce மற்றும் freelancing யில் தனக்கான பாதையை அமைத்துக்கொண்டது போல சக பல்கலைக்கழக மாணவர்களையும் அதன் பக்கம் ஊக்குவிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டவராகக் காணப்பட்டார். மேலும் தான் அடைந்த நலன்களை சக மாணவர்களும் அடையும் நோக்குடனும் மற்றும் தான் பல்கலைக்கழக மாணவராக இருந்த போது **வழிகாட்டியாக** யாரும் இருக்கவில்லை இந்த குறை மற்ற மாணவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதற்காக UPBRIGHT நிறுவனத்தால் **இலவசமாக** கிழக்கு மற்றும் தென்கிழக்கு அரச பல்கலைக்கழகங்களுக்கு இலவசக் கருத்தரங்குகளையும் மேற்கொண்டுள்ளார். அதனை தொடர்ந்து கல்வி வாழ்க்கைக்கு முற்று புள்ளி வைக்காமல் அடுத்த படியாக **சட்டத்துறையைத்** தெரிவு செய்து (LLB) UK பல்கலைக்கழகத்தில் தனது சட்டக்கல்வியை பயில்கிறார்.

ஆரம்பத்திலே இவரது UPBRIGHT நிறுவனத்தைப் பொறுத்தவரை வெறும் 10 மாணவர்களைக் கொண்டதாக அமைந்த போதிலும் தற்போது இதன் அங்கத்தவர்கள் 3500 ஐயும் தாண்டி தடம் பதித்து இலங்கையை அடுத்து **அமெரிக்கா, இந்தியா, ஜார்ஜியா** போன்ற நாடுகளைத் தொட்டுவிட்டது இதுவே மிகப் பெரிய சாதனை அல்லவா. இதில் ஒரு சுவாரஸ்யம் என்னவென்றால் அஸ்பரால் உயர் தரத்தில் கல்வி கற்கும் போது பயிற்சிக் கொப்பியின் முதல் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் "Everything Starts From Zero" எனும் வாக்கியம் ஆகும்.

அதுவே நிறுவனத்தினதும் ஒரு வாசகம் (Slogan) ஆகவே மாறுகிறது. **Google**யில் இவரது UPBRIGHT நிறுவனம் **five star rating** ஐயும் பெற்று சிறந்த ஆன்லைன் கல்வித் தளமாகவும் காணப்படுவதுடன் மாணவர்களின் Online தேடலுக்கு பதிலாகவும் காணப்படுகின்றது. நிறைய மாணவர்களுக்கான Education **based of softwares** யினையும் மாணவர் நலன் கருதி, official price இனை விட **குறைந்த விலையிலேயே** இவர் UPBRIGHT மூலமாக வழங்கி வருகிறார். **(windows, canva, grammarly, quillbolt and more (www.ubkeys.com))** இவர் தனது தொடர் முயற்சியில் தோல்வி கண்டதில்லை. இன்னும் பல்துறைகளில் தடம் பதிப்பார் என்பது உறுதியே.

UPBRIGHT CEO யின் BEHINDWOODS


நீங்கள் ஒரு எரிசக்தி ஹீரோ?

இலங்கை தேசிய எரிசக்தி திறமையான விருது - 2024



மூலம் நடத்தப்பட்டது இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை

உள்வாங்கல்கள் 07 மார்ச் 2024 அன்று முடிவடையும்.

தேசிய வலு திறன் விருதுகள் 2024 ஆனது வலு திறன் செயற்பாடுகளை உறுதி செய்வதில் கூடுதல் மைல் செல்லும், பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களை அங்கீகரித்து வெகுமதி அளிக்க முயல்கிறது.

குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகளுக்கு விண்ணப்பத் திகதிக்கு முன் இருந்து இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு நிறுவனமும் பொருத்தமான வகையின் கீழ் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்:

- உற்பத்தி
- சேவைகள் - ஹோட்டல்கள், வணிக கட்டிடங்கள், அரச துறை அலுவலக கட்டிடங்கள்
- சுகாதாரம்

விருதுகளுக்கு போட்டியிடும் வருங்கால நிறுவனங்கள் தங்கள் விண்ணப்பங்களை தற்போதைய வலு நுகர்வு தரவு மற்றும் உற்பத்தித் தரவுகளுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

நுழைவுக் கருவிகளை www.energy.gov.lk என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம் அல்லது திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:30 முதல் மாலை 4:00 மணி வரை அதிகாரத்தின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட உள்ளீடுகளை ஒருவருவு அலுவலகத்தில் தனிப்பட்ட முறையில் ஒப்படைக்கலாம் அல்லது 07 மார்ச் 2024 அன்று அல்லது அதற்கு முன் எங்களைத் தொடர்புகொள்ள பதிவு செய்யப்பட்ட அட்டையின் கீழ் அனுப்பலாம்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை
72, ஆனந்த குமாரசாமி மாவதா, கொழும்பு 07,
தொலைபேசி: 011 2 575 030,
இணையம் தளம்: www.energy.gov.lk

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 15ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 17

### குறள் தரும் சிந்தனை

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

*கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம் அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை.*

# வருமானம் ஈட்டும் வகையிலான பொருளாதார முன்னேற்றம் அவசியம்

உலகில் ஒவ்வொரு நாட்டுக்கும் பொருளாதார முன்னேற்றம் அத்தியாவசியம். பொருளாதார வளர்ச்சியும் முன்னேற்றமும் இன்றி எந்தவொரு நாட்டினதும் மக்களால் சுபீட்சமான வாழ்வை அடைந்து கொள்ள முடியாது. அதன் காரணத்தினால் பொருளாதார வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடைந்து கொள்வதில் ஒவ்வொரு நாடும் அக்கறையும் சிரத்தையும் எடுத்துக் கொள்கின்றன. அதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கின்றன.

அந்த வகையில் ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதாரத்திற்கு வருமானம் அளிப்பதில் சுங்கம், வற் மற்றும் வருமான வரி ஆகிய மூன்றும் முக்கிய பங்களிக்கக் கூடியனவாக உள்ளன. அவை ஒவ்வொரு நாட்டினதும் வருமானத்திற்கான பிரதான மூலங்களாக விளங்குகின்றன.

இருப்பினும் சர்வதேச, பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்களையும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களையும் பொருளாதார மேம்பாட்டுக்கு பயன்படுத்திக் கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அதற்கேற்ப இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் இந்தத் துறைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் சுங்கம் உள்ளிட்ட ஏனைய வருமானத் திணைக்களங்களை முழுமையாக நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது. நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் சர்வதேச சுங்க தின வைபவம் கொழும்பு சுங்கத் திணைக்களத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற போது உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, '2023 இல் நாம் எடுத்த முடிவுகளால், 2022 இல் பொருளாதார சரிவில் இருந்து மீள்வதற்கான வழி கிடைக்கப் பெற்றது. ஆனால் அது இன்னும் முடியவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள், நாட்டின் வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 வீதமாக ஆக்குவோம். 2026 இல் அதனை 15 வீதமாக அதிகரித்துக்கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டதோடு 'ஒவ்வொரு நாளும் கடன் வாங்குவதால்தான் நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. இந்த பொருளாதார முறைமையை மாற்ற வேண்டும். பழைய பொருளாதார முறையால் நாட்டை முன்னேற்ற முடியாது' என்றும் தெரிவித்திருக்கிறார்.

கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட கடன் வாங்கும் முறையில் பலவீனங்களும் தவறுகளும் காணப்பட்டன. அவை நாட்டின் பொருளாதார சரிவுக்கு பாரிய பங்களிப்பு நல்கியது. பலவீனங்களையும் தவறுகளையும் கொண்ட கடன் வாங்கும் முறைமையின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியாது. அதனால் அப்பொருளாதார முறைமையை மாற்றியமைப்பது மிகவும் அவசியமானது.

அதேநேரம் ஜனாதிபதி குறிப்பிடுவது போன்று, பழைய பொருளாதார முறைமையால் நாட்டை முன்னேற்ற முடியாது. இதற்கு கடந்த கால அனுபவங்களும் நல்ல முன்னுதாரணங்களாகும். அதனால் தற்போதைய பொருளாதாரத்தை வருமானம் ஈட்டக் கூடிய வகையில் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கு பொருளாதாரத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியமானது. போட்டிச் சந்தையுடன், ஏற்றுமதியை அதிகரிக்கவும், அந்நியச் செலாவணியை அதிகரிக்கவும் முயற்சிகள் முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக முதலீடுகளை கவர்ந்திழுப்பதற்கு ஏற்ற வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்.

இதன் பொருட்டு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள், சர்வதேச மற்றும் பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் என்பவற்றைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதற்கு ஏற்ப சட்ட ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். பொருளாதாரம் மேம்படும் போது அதன் பிரதிபலன்கள் மக்களை சென்றடையக் கூடியதாக இருக்கும். அது மக்கள் சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்.

2021இல் இந்நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு பெரிதும் தட்டுப்பாடு நிலவியது. எரிபொருள், பசளை ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். தற்போது அவற்றுக்கு தட்டுப்பாடு கிடையாது. ஆனால் அவற்றைக் கொள்வனவு செய்ய பணம் இன்றியமையாததாகும். அதேநேரம் மக்கள் இன்னும் வாழ்க்கைச் சுமையை உணர்கிறார்கள். பொருளாதார வளர்ச்சியுடன்தான் அது குறையும்.

ஆகவே பொருளாதார ரீதியில் மக்கள் சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ப வருமானம் ஈட்டும் வகையில் முன்னேற்றமடைவது அவசியம். அதுவே ஜனாதிபதியின் விருப்பமாகும். அதற்கேற்பவே பொருளாதார முன்னேற்றத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அப்போதுதான் மக்கள் சுயமாக முன்வந்து வரிகளையும் செலுத்தக்கூடிய நிலை உருவாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஈழத்து சஞ்சிகை இலக்கியத்தின் அடையாளம் டொமினிக் ஜீவா

## அன்னாரின் மூன்றாம் வருட நினைவுதினம்



ஈழத்து இதழியல் வரலாற்றில் சாதனை படைத்த 'டொமினிக் ஜீவா' 2021 ஜனவரி 28 இல் தனது 93 வது அகவையில் காலமானார். அன்னாரின் மூன்றாவது ஆண்டு நினைவு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

பல தசாப்தங்களாக வெற்றியுடன் வெளிவந்த 'மல்லிகை' சஞ்சிகையின் வெற்றிக்கு அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் கொள்கைப் பிடிப்பு, அவரது உழைப்பு, பொறுமை, விவேகம், பெருந்தன்மை, தோழமை உணர்ச்சி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று ஆகியவையே காரணங்களாகும். தமிழ்_ சிங்கள எழுத்தாளர்களின் இலக்கியப் பாலமாக விளங்கிய டொமினிக் ஜீவா, ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னோடியுமாவார்.

டொமினிக் ஜீவாவின் மல்லிகை, தமிழ் இலக்கியச் சிற்றிதழ்களில் மிக அதிக காலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்த மாத இதழாகும்.

'மல்லிகை'யின் முதல் இதழ் 1966 ஒகஸ்ட் மாதத்தில் வெளியானது. இதன் ஆசிரியரான டொமினிக் ஜீவா மல்லிகையை ஒரு முற்போக்கு மாத இதழாக வெளியிட்டார். அச்சஞ்சிகை நாற்பதுக்கும் அதிக ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது. இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் மல்லிகை சஞ்சிகைக்கும், டொமினிக் ஜீவா அவர்களுக்கும் முக்கிய பங்குண்டு.

இலங்கையின் மூத்த எழுத்தாளரும், பதிப்பாளருமான டொமினிக் ஜீவா இன, மத பேதமின்றி மாற்றுக் கருத்தாளர்களுடனும் நட்பாக தோழமையில் இருந்தவர்.




டொமினிக் ஜீவா எழுதிய 'தண்ணீரும் கண்ணீரும்' சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. இவரது 'எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்' ஈழத்தின் குறிப்பிடத்தக்க ஒரு சுய வரலாற்று நூலாகும். டொமினிக் ஜீவா எழுதிய சிறுகதைத் தொகுப்புகளான தண்ணீரும் கண்ணீரும், பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின் தரிசனங்கள், டொமினிக் ஜீவா சிறுகதைகள் ஆகிய நூல்கள் ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

மல்லிகையின் இதழின் முகப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் தமிழகத்துக் கலை இலக்கியகர்த்தாக்களின் உருவப் படங்களை பிரசுரித்து மக்கள் மத்தியில் அவர்களைக் கொண்டு சென்றவர் அவர்.

டொமினிக் ஜீவாவின் கட்டுரைத் தொகுப்புகளான அனுபவ முத்திரைகள், எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம், அச்சுத்தாளினூடாக ஓர் அனுபவ பயணம், நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள், முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள் ஆகிய நூல்களும் பிரபல்யமானவையாகும்,

அத்துடன் மல்லிகையில் வெளிவந்த இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிங்களச் சிறுகதைகளை ஒன்று சேர்த்து 'சிங்களச் சிறுகதைகள்' என்ற பெயரில் நூலாகவும் வெளியிட்டார்.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றினை வெளிப்படுத்தும் ஆவணங்களாக இருந்தன மல்லிகை இதழ்கள். இதனாலேயே ஜீவா பற்றிய ஆய்வுநூல்களை வேறு பல அறிஞர்களும் எழுதியுள்ளனர்.

'டொமினிக் ஜீவா கருத்துக் கோவை' எனும் தொகுப்பை மேமன்கவி எழுதியுள்ளார். 'மல்லிகை ஜீவா நினைவுகள்' எனும் நூலை லெ.முருகபூபதி, 2001 இல் வெளியிட்டார். பின்னர் 'பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும்' என்ற தொகுப்பு மேமன்கவியால் எழுதப்பட்டதையும் பலர் அறிவர். 2004 இல் மல்லிகை ஜீவாவின் 'மனப்பதிவுகள்' என்ற நூலை திக்குவல்லை கமால் ஆய்வு செய்து வெளியிட்டார்.

இத்தகைய இலக்கிய சாதனைகளை படைத்த அவருக்கு 2013இல் கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும், ரொறொன்ரோ பல்கலைக்கழக தென்னாசியக் கழகமும் இணைந்து 'இயல் விருது' வழங்கின. 2007இல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் 'சங்கச் சான்றோர் விருது' வழங்கியது.

1966 இலிருந்து மல்லிகை மாத இதழை ஆரம்பித்து நாற்பதுக்கும் அதிக ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வந்ததன் வெற்றிக்கு மற்றொரு முக்கிய காரணம், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் குரலாக அது ஒலித்ததுதான். இச்சங்கத்தின் கொள்கைகளைப் பட்டிதொட்டியெங்கும் பரப்பும் செயல் வீரனாக விளங்கினார் அவர்.

யாழ்ப்பாணத்தில் 'மல்லிகைப் பந்தல்' பிரசுரத் தளத்தை உருவாக்கி அறுபதுக்கும் கூடுதலான தரமான நூல்களை வெளியிட்டுள்ளமை அவரது சாதனையாகும்.

சரித்திரமாகிய மல்லிகை சஞ்சிகை:

டொமினிக் ஜீவா 2021 ஜனவரி 28 மாலை தனது 93 ஆவது வயதில் கொழும்பில் கொவிட் தொற்று காலத்தில் காலமானார். காலம் கடந்த பின்னரும் நின்று நிலைத்துப் பேசப்படப் போகும் இதழ் மல்லிகை.

மல்லிகையை ஆராய்ந்து கலாநிதிப் பட்டம் வாங்கக்கூடிய ஒரு காலம் வரத்தான் போகின்றது என இலக்கிய ஆய்வாளர்கள குறிப்பிடுகின்றனர்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு-கிழக்கு அவைத்தலைவராக அருட்திரு. சுபேந்திரன்



இலங்கை மண்ணில் மெதடிஸ்த திருச்சபை 209 ஆவது ஆண்டில் கால்பதித்துள்ள இத்தருணத்தில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு, கிழக்கு திருமாவட்ட அவையின் 14 ஆவது தலைவராக அருட்திரு. அருளானந்தம் சாமுவேல் சுபேந்திரன் அவர்கள் நியமிக்கப்படுகின்றார்.

இவர் 1971.12.20 இல் யாழ்ப்பாணம் கரவெட்டியில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/திரு இருதயக்கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யா/ஹாட்லிக் கல்லூரியிலும், அதனைத் தொடர்ந்து யா/யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்றார்.

இவர் 1994 ஆம் ஆண்டில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வருடாந்த திருப்பேரவைக் கூட்டத் தொடரில் இறைபணிக்காக தம்மை அர்ப்பணித்து ஏற்றுக்கொள்ளப்பட்டார். இவர் 1995 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டுவரை தனது இறையியல் கல்வியை இலங்கை இறையியல் கல்லூரி பிலிமத்தலாவையில் குருத்துவமாணவனாக பயின்றார்.

அதனைத் தொடர்ந்து இவர் 1999 ஆம் ஆண்டு முதல் மன்னார், வன்னித்திருப்பணி, ஜீவோதயம், கோட்டைமுனை, கல்லாறு, செங்கலடி, வாழைச்சேனை, புளியந்தீவு ஆகிய சேகரங்களில் முகாமைக் குருவானவராக பணியாற்றியுள்ளார்.

அத்தோடு 2011 ஆம் ஆண்டில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு, கிழக்கு திருமாவட்ட அவை செயலாளராக தெரிவு செய்யப்பட்டு 2014 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வருடாந்த திருப்பேரவை கூட்டத்தொடரில் 2024 ஆம் ஆண்டுக்கான வடக்கு, கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு தை மாதம் 2024 ஆம் ஆண்டு முதல் திருமாவட்ட அவைத்தலைவராக நியமிக்கப்படுகிறார்.

இவர் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திருமாவட்ட அவை தலைவராக நியமனம் பெறும் வழிபாடு நேற்று (28.01.2024) காலை 10.00 மணிக்கு புளியந்தீவு மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெற்றது. மேற்படி வழிபாடானது இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவைத் தலைவர் அருட்திரு.டபிள்யூ .பீ.எபநேசர் ஜோசப் அவர்களினால் நடத்தப்பட்டது'.

செல்லையா பேரின்பராசா...
(துறைநீலாவணை நிருபர்)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சர்வதேச மாநாடு



இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழக பல்துறை ஆராய்ச்சிக்கான நிலையம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் ஈ.எஸ்.என் பதிப்பகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த 'நாளைய சவால்களுக்கான நிலைத்திருக்கும் தன்மை, புத்தாக்கம், இடைநிலை ஆராய்ச்சி' என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு கிழக்குப் பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் ஆரம்ப உரையாற்றிய இம்மாநாட்டில், தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவரும் றுகுணு பல்கலைக்கழக பயிர் விஞ்ஞானத்துறையைச் சேர்ந்த வாழ்நாள் பேராசியருமான ரஞ்சித் சேனாரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிரதம அதிதி தனது உரையின்போது, "நாட்டின் பிரச்சினைகளுக்கு அறிவியல் மூலம் தீர்வு காணப்படும். எனவே, தேசிய விஞ்ஞான மன்றமும், இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கமும் பல்துறை துறையில் உள்ள கல்வியாளர்களுடன் கைகோர்த்து அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பதற்குத் தயாராக உள்ளன" என்று குறிப்பிட்டார்.



கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.ஜி.ஜோன்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந்தியாவின் ஈ.எஸ். என் பதிப்பகத்தின் நிறுவுனரும் அதன் தவிசாளருமான கலாநிதி ஜே.பானுசந்தர், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி. ஜே.ஜே.முரளிதரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மாநாட்டின் முக்கிய பேச்சாளர்களாக தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உதவிப் பேராசியர் கலாநிதி வி. சர்மிளா நிகழ்வில் கலந்து கொண்டதுடன், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இயற்கை மருத்துவ நிபுணரும் ஊட்டச்சத்து தொடர்பான அறிவுரையாளருமான வைத்தியர் நித்தி கனரத்னம் நிகழ்நிலை ஊடாகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அத்துடன் நிகழ்வின் பங்காளரான தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் நாகா சுப்ரமணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இம்மாநாட்டுக்காக இலங்கை, இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளில் இருந்து 162 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்துடன், அவற்றில் 138 கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாநாட்டு குழு செயலாளரும், பல்துறை ஆராய்ச்சிக்கான நிலையப் பணிப்பாளருமான கலாநிதி பி.றொட்னி பெர்னாண்டோ நிகழ்வுகளை நெறிப்படுத்தியிருந்தார்.



எம்.எஸ்.எம்.நூர்தீன்...
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# தகவல் தொழில்நுட்ப இயக்க கட்டமைப்பு களுத்துறை மாவட்டத்தில் அங்குரார்ப்பணம்

மேல்மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில் பதினான்கு பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதான தகவல் தொழில்நுட்ப இயக்க கட்டமைப்பொன்று செயல்படுத்தப்படவுள்ளது . இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மாவட்ட செயலாளர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றன.

களுத்துறை மாவட்ட தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டு கட்டமைப்பின் இயக்கம் தொடர்பில் அவசியமான பூர்வாங்க அறிவூட்டல் மற்றும் பயிற்சிப் பட்டறை மாவட்ட செயலாளர் ஜீ.பிரசன்ன ஜனக குமாரவின் வழிகாட்டலில் மாவட்ட செயலாளர் பணிமனையில் இடம்பெற்றது.

மாவட்டத்திலுள்ள பதினான்கு பிரதேச செயலகங்கள் சார்பில் தலா இரண்டு பிரதிநிதிகள் பட்டறையில் கலந்து கொண்டதுடன், ஐந்து விடயங்கள் சம்பந்தமாக ஐந்து கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அபிவிருத்தித் திட்டம், களஞ்சிய முகாமைத்துவம், ஆவணங்கள் காப்பறை முகாமைத்துவம், தபால், மற்றும் அந்தரங்க கோவைகள் என்பன தொடர்பான விடயங்கள் குறிப்பிட்ட ஐந்து அம்சங்களாகும்.





மேற்படி வேலைத் திட்டத்தின் பிரகாரம் ஆரம்பகட்ட நடவடிக்கையாக மாவட்டத்திலுள்ள பதினான்கு பிரதேச செயலகங்களுக்கும் ஒரே மாதிரியான தரவுகள் கட்டமைப்பு அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டள்ளது. களுத்துறை, பாணந்துறை, பண்டாரகம, ஹொரண, இங்கிரிய, மத்துகம, அகலத்தை, புளத்சிங்கள, பேருவல, மதுராவல, தொடங்கொட, மில்லனிய, வில்லாளி மற்றும் பாலிந்தநுவர என்பன மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக பிரிவுகளாகும்.

களுத்துறை மாவட்ட செயலாளரின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் பிரகாரம் புளத்சிங்கள பிரதேச செயலக அதிகாரிகள், மாவட்ட பயிற்சி பிரிவு மற்றும் லிவிங் லெப் (living lab) பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இதன் முதற்கட்டமாக களுத்துறை பிரதேச செயலகத்துக்கு மேற்படி ஐந்து கட்டமைப்புகளும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. பின்னர் ஏனைய பிரதேச செயலகங்களுக்கும் குழு அடிப்படையில் திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர், உதவி பிரதேச செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## மானுடவியல்



150

அங்ஙனஞ் செய்த தபோபலம்பற்றி, தோணியப்பருடைய பெருங்கருணையினாலே, உலகமெல்லாம் உய்யும்படி, பகவதியாருடைய அருமைத் திருவயிற்றிலே, கர்ப்போற்பத்தியாகிய பெரும்பேறு உளதாயிற்று. சிவபாதவிருதயர் அதனை உணர்ந்து, திருவருளைத் துதித்து, மூளுகின்ற மகிழ்ச்சியோடு, தங்கள் வேதவிதிப்படி செய்ய வேண்டுஞ் சடங்குகளைப் பத்துமாசங்களினும் சுற்றத்தார்களோடு சிறக்கச் செய்து, பேரின்பத்தை நுகருநாளிலே, சூரியன் முதலிய கிரகங்கள் உச்சங்களிலே மிக்கவலியுடன் நிற்க, திவ்வியலக்கினம் எழ, திருவாதிரை நக்ஷத்திரத்திலே, பரசமயத்தருக்கு நீங்கவும், வைதிகமார்க்கமும் சைவமார்க்கமுந் தழைத்தோங்கவும், பிராமணர்களுடைய ஆகுதிகள் பெருகவும், எம்மொழிகளினுந் தமிழ்மொழியே உயர்ச்சியடையவும், பலவுலகங்களுள்ளும் பூலோகமும் அப்பூலோகத்திலுள்ள பலநாடுகளுள்ளுந் தமிழ் நாடுமே சிறக்கவும், பிள்ளையார் திருவவதாரஞ் செய்தருளினார். அவருக்குச் சாதகருமம், நாமகரணம், அன்னப் பிராசனம், சௌளம் என்கிற கருமங்கள் உரிய காலங்களிலே மிகுந்த சிறப்போடு செய்யப்பட்டன.

பிள்ளையார், மூன்றாம் ஆண்டிலே, தம்முடைய தந்தையாராகிய சிவபெருமான் தம்மைச் சிவபாதவிருதயருக்குப் புத்திரராகக் கொடுக்க அவரைப் பிரிந்தமையால், ஓரோர்கால் அப்பிரிவு உள்ளத்திற்றோன்ற வெருக்கொண்டாற் போலக் குறிப்பயிலாய் அழுவர். இங்ஙன நிகழுநாளிலே வேறொரு நாள் தந்தையாராகிய சிவபாதவிருதயர் ஸ்நானம் பண்ணுதற்குப்போம் பொழுது, பிள்ளையார், பரமசிவனுடைய திருவருள் கூட, அவரைத் தொடர்ந்து அழுதுகொண்டு பின் சென்றார். பின்சென்ற பிள்ளையாரைத் தந்தையார் திரும்பிப் பார்த்து, கோபமுடையவர் போல விலக்குதலும் பிள்ளையார் கால்கொட்டி மீளாராக தந்தையார் "உன் செய்கை இதுவாயில் வா" என்று, கொண்டு சென்று, ஆலயத்தினுள்ளிருக்கின்ற தீர்த்தத்தை அடைந்து. அப்பிள்ளையாரைக் கரையிலே வைத்துவிட்டு, தாந்தீர்த்தத்தினுள்ளே இறங்கி நின்று கொண்டு சங்கற்பம் அகமருஷண சூக்தபடன முதலியன செய்தார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# தை அமாவாசை

தை அமாவாசை தினத்தில் மறைந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தால், அவர்களின் அருளாசியால் எண்ணற்ற நன்மைகள் ஏற்படும். தை அமாவாசையில் முன்னோருக்கு உணவு, புத்தாடை படைத்து வழிபட்டு விட்டு, அவற்றை ஏழை எளியவர்களுக்கு தானமாக வழங்கினால் நன்மைகள் பல வந்து சேரும்.



அமாவாசை அன்று நம்முடைய முன்னோர்களின் ஆத்ம சாந்திக்காக செய்யப்படும் திதி, தர்ப்பண பூஜையானது, நம்முடைய வம்சாவழியினருக்கு பெரிதும் நலம் தரும். தர்ப்பணம் என்பது எள்ளும், நீரும் கொண்டு தரப்படுவதாகும். இந்த தர்ப்பண நீரின் சக்தியானது, பூமியின் ஆகர்ஷன சக்தியை மீறி, மேல் நோக்கி எழும்பிச் சென்று, பல கோடி மைல்களுக்கு தொலைவில் உள்ள பித்ரு லோகத்தை அடையும். தை அமாவாசையன்று, இந்த சக்தியானது மிகவும் அபரிமிதமாக பெருகுகிறது. முன்னோர்களுக்கு தர்ப்பணம் அளிப்பவர்களின் வீட்டில் காரியத் தடைகள் நீங்கி நன்மைகள் நடைபெறும்.

அமாவாசையன்று தீர்த்தக்கரைகளில் நீராடும் போது, பிதுர்காரகராகிய சூரியனுக்கு இரு கைகளாலும் நீர் விடும் அர்க்கியம் செய்வது மிகுந்த நன்மை தரும். கடல் அல்லது புண்ணிய நதிகளில் நீராடியவுடன் முழங்கால் அளவு நீரில் நின்றுகொண்டு, சூரியனை நோக்கி மூன்று முறை அர்க்கியம் செய்வதன் மூலம் சூரியனின் அருளையும் பூரணமாக பெறலாம். முன்னோர்களுக்கு மூன்று கை தண்ணீர் என்று சொல்வார்கள். அவர்களுக்கு செய்யும் தர்ப்பண பலன்களை நம்மிடம் இருந்து பெற்று பிதுர் தேவதைகளிடம் சூரியன் வழங்குகிறார். அந்த தேவதைகள் மறைந்த முன்னோரிடம் பலன்களை சேர்க்கின்றன என்பது ஐதீகம்.

சனி அமாவாசை தினத்தில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் அளிப்பது போல ஏழைகளுக்கு தானம் அளிப்பதும் சிறப்பானது. கருப்பு உளுந்து, கருப்பு எள், வெல்லம், உடைகள், பார்லி ஆகியவை நாம் தானம் அளித்தால் மிகவும் நல்லது. இதனால் நம் முன்னோர்களின் ஆசி கிடைக்கும். தானத்தில் சிறந்த தானம் அன்ன தானம் என்பார்கள். அதே போல் தண்ணீர் தானமும் சிறப்பானது. தேவையான மக்களுக்குத் தண்ணீர் தானம் கொடுப்பது, குடிக்க இனிப்பு கலந்த தண்ணீர் கொடுப்பது மிகவும் சிறந்தது.

பொதுவாக அமாவாசை தினத்தில் நம்முடைய வீடுகளை சுத்தம் செய்து முன்னோர் வழிபாடு செய்வது வழக்கம். அன்றைய தினம் வாசலில் கோலம் போடக்கூடாது. சண்டை சச்சரவு எதுவும் செய்யக்கூடாது. ஏழைகளையும் தூய்மை பணி செய்பவர்களை அவமானப்படுத்தக்கூடாது என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. நமது மூததையர்கள், முன்னோர்களை நாம் எப்போதும் மறக்க கூடாது.

தாத்தா, கொள்ளுத்தாத்தா, எள்ளுத்தாத்தா, பாட்டன் பூட்டன் என பல தலைமுறையினரை பெயரை நினைவில் வைத்து நாம் தர்ப்பணம் தரவேண்டும். அரிசி, பருப்பு, காய்கறிகள் குறிப்பாக வாழைக்காய், குடை, வஸ்திரங்கள், காலணி உள்பட பல பொருட்களை சக்திக்கு ஏற்ப தானம் கொடுக்க வேண்டும். வருங்கால சந்ததியினருக்கு முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதனால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக்கூற வேண்டும். நம்முடைய முன்னோர்களுக்கு அளிக்கும் தர்ப்பணத்தின் மூலம் நமக்கு ஏற்பட்டு வந்த தடைகள் நீங்கும் சுப காரியங்கள் நடைபெறும். மன குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும்.

சைவ மஞ்சரி

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

### மாவிலை தோரணம்

**19525) மாவிலையின் நுனிப்பகுதியில் யார் வசிப்பதாக ஐதிகம்?**

ஸ்ரீ லஷ்மி

**19526) மாவிலையை வீட்டு வாசல்களில் தோரணமாக இந்துக்கள் கட்டுவதன் நோக்கம் என்ன?**

இவ்வாறு கட்டுவதால் ஸ்ரீ லஷ்மியின் அருள் பிரவாகம் அவ்வீட்டினுள் பிரவேசிப்பதாகவே அர்த்தம்.

**19527) வேறு எந்த மர இலைகளுக்கும் இல்லாத சக்தி மாவிலைக்கு உண்டு. அது என்ன சக்தி?**

வெட்டப்பட்ட பின்னரும் அல்லது பறிக்கப்பட்ட பின்னரும் அவ்விலையின் சக்தி அதை பயன்படுத்துபவர்களின் இல்லங்களில் அல்லது இடங்களில் வியாபித்து இருக்கும்.

**19528) மாவிலையில் இருக்கும் வேறு சக்தி என்ன?**

வீட்டினுள் எவ்விதமான துர்தேவதைகளையும் வரவிடாது தடுக்கும்.

**19529) மாவிலையில் இருக்கும் வேறு சக்தி என்ன?**

காற்றினால் பரவக்கூடிய பக்டீரியா மற்றும் வைரஸ் கிருமிகளை முற்றாகவே அழித்துவிடும் சக்தியும் மாவிலைக்கு உண்டு.

**19530) மாவிலையில் வேறு ஏதாவது சக்தி உண்டா?**

மனிதன் வெளிவிடும் கரியமில (காபனீரொட்சைட்டு) வாயுவை மாவிலைகளின் நுனிப்பகுதிகள் உறிஞ்சுக் கொண்டு அதற்குப் பதிலாக அதிகளவு ஒட்சீசனை மக்களுக்கு வழங்கும்.

**19531) மாவிலைகள் கட்டப்படுவதற்கு வேறும் ஏதாவது காரணம் உண்டா?**

அதிகமாக மக்கள் கலந்து கொள்ளும் மங்கள அல்லது அமங்களக் கிரியைகளின் போது ஒட்சீசன் பற்றாக் குறை ஏற்படாமல் இருக்க இந்த மாவிலைகள் கட்டப்படுகின்றன.




**19532) இந்து மக்கள் மாவிலைத் தோரணத்தை எத்தனை வகையாகப் பிரித்து தோரணமாக அமைத்தார்கள்?**

இரண்டு

**19533) அந்த இரண்டு வகைகளும் எவை?**

மங்களம், அமங்களம்

**19534) மாவிலையை சற்று நன்றாக உற்று நோக்குங்கள் அது எந்த வடிவில் இருக்கிறது?**

ஒரு தேவதையின் வடிவில்

**19535) மங்களத் தோரணம் கட்டும் போது காம்புப் பகுதி எதுவாக கருதப்படுகிறது?**

தலையாக

**19536) இலைப்பகுதி எதுவாக கருதப்படுகிறது?**

உடல் பகுதியாக

**19537) நுனிப்பகுதி எதுவாக கருதப்படுகிறது?**

கால் பகுதியாக சொல்லப்படுகின்றது.

**19538) ஒருவர் மங்களக் காரியங்களுக்காக நம் இல்லம் தேடி வருகை தரும்போது நாம் அவர்களை எப்படி வரவேற்பு செய்கின்றோம்?**

இரு கரங்கள் குவித்து தலைக் குனிந்து

**19539) மங்களத் தோரணம் எவ்வாறு அமைக்க வேண்டும்?**

மாவிலையின் தலை (காம்புப்) பகுதியை இலையின் முன்புறமாக மடக்கி சொருக வேண்டும்.

**19531) அதே போன்று அமங்களக் கிரியையின்போது எவ்வாறு செய்ய வேண்டும்?**

மாவிலையின் தலை (காம்பு) பகுதியை பின்புறமாக மடக்கி சொருக வேண்டும்.


**19532) இவ்வாறு அமைப்பது ஏன்?**

தலைக் குனிந்து வரவேற்று வாழ்ந்த உடல் இங்கு தலை சாய்த்து சதா படுக்கையில் உள்ளது என்பது இதன் பொருள்.



**(இந்து கலாசார திணைக்களம் கொழும்பு, கம்பஹா அறநெறி ஆசிரியர்களுக்கு நடத்திய கருத்தரங்கில் அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் குமாரசாமி ஜெயராஜ் கற்றுத் தந்தது.)**

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 73



பிறிதொருவரின் குணம், செயல், இயல்பு ஆகிவைகளை அறிந்து கொண்டு, அதன் மூலம் அவன் பெறுகின்ற பலன்கள். விளைவுகளை அறிந்து கொண்டால், அதுவே நமக்கு அனுபவ பாடத்தைக் கற்றுக் கொடுக்கும். நற்செயல்களால் மேலோங்கி வளர்பவர்களை, சமுதாயத்தில் நற்பெயர் பெற்ற சான்றோர்களின் வாழ்வை வழிக் காட்டும் பாடமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதே போல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்பலன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். இம் முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.

ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையானது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும். எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னுடைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்ததிலிருந்தே உள்ளன. அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டுவிட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத்தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக்காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும். வெளிப்புற லாபநட்டங்கள், உதவி இடைஞ்சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை. நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு. எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான். எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வசக்தி மிகுந்து காணப்படும்.



முன்னேஸ்வரம் புனித பூமியில் "குருகுலக்கல்வி நிலையம்" கடந்த (25) திகதி மிகவும் சிறப்பாக திறந்து வைக்கப்பட்ட போது... (உடப்பு குறூப் நிருபர்)



கண்டி மகியாவை அருள்மிகு ஸ்ரீ காட்டு மாரியம்மன் ஆலயத்தில் மாதாந்தம் நடைபெறும் பௌர்ணமி யாக பூஜையும் தைப்பூசத்தை ஒட்டி ஸ்ரீ முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேகமும் சுவாமி உள்வீதி வருதலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.
*(படங்கள்: கண்டி மு. தீபன்)*



தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் நடைபெற்ற பொங்கல் விழா நிகழ்வின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட விவேகானந்த சபையின் பொதுச்செயலாளர் சிவசண்முகநாதன், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் அதிகாரி மளவராஜன் மற்றும் மாணவர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் காணலாம். தந்தை செல்வா நற்பணி

# இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவின் பூதவுடல் நல்லடக்கம்











**(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)**

திடீர் விபத்தொன்றில் உயிரிழந்த புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான சனத் நிசாந்த பெரேராவின் பூதவுடல் நேற்று (28) ஆராச்சிக்கட்டுவ ராஜக தளுவ தேவாலய மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. சிலாபம், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த பூதவுடல் நேற்று பிற்பகல் 1 மணியளவில் இறுதிக் கிரியைக்கான மும்மத சமய அனுஷ்டானங்களுடன், அரச தலைவர்களின் உரைகள் என்பனவற்றின் பின்னர் பூதவுடல் வாகன பேரணியோடு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு ஆயிரக் கணக்கானோர் மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த இறுதி நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உட்பட அரச திணைக்கள பிரதானிகளும், முப்படையினரும் கலந்து கொண்டனர்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரும் நேற்று காலை ஆராச்சிக்கட்டுவ பகுதிக்கு வருகை தந்து, இராஜாங்க அமைச்சரின் பூதவுடலுக்கு தனது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.






# இந்தியாவின் 75 ஆவது குடியரசு தினம் கொழும்பில்









இந்தியாவின் 75ஆவது குடியரசு தினம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரின் இல்லமான 'இந்திய இல்லத்தில்' உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தலைமையில் நடைபெற்றபோது எடுத்த படங்கள்.

# சோளக செய்கை பாதிப்பு

*(கெக்கிராவ குறூப் நிருபர் )*

அநுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதிக் குட்பட்ட மஹசியம்பலகஸ்ஸாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சோளக பயிர்ச்செய்கைகள் புதியதோர் வகை புழுக்களின் தாக்கத்தினால் பாதிப்படைந்துள்ளதாக அப்பிரதேச சேனை பயிர் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் அண்மையில் குறித்த இடத்திற்கு நேரில் விஜயம் செய்து பாதிப்படைந்த பயிர்களை பார்வையிட்டதோடு பாதிக்கப்பட்ட சேனைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுப்பது தொடர்பில் விவசாய அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முச்சக்கர வண்டி விபத்தில் ஒருவர் பலி

*(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர் )*

கலென்பிந்துனுவெவ கனேவெல்பொல வீதியில் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டி வீதியை விட்டு விலகிச் சென்று குழியொன்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மரதண்கடவல பொலிசார் தெரிவித்தனர்.

ஊத்துப்பிட்டிய முறியாகடவள பகுதியைச் சேர்ந்த ரீ.ஆர். முஹம்மது என்ற 65 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த (25 ) ஆம் திகதி மாலை 3:30 மணியளவில் உயிரிழந்தவர் முச்சக்கர வண்டியில் கனேவல்பொல பகுதியிலிருந்து கலென்பிந்துனுவெவ பகுதிக்கு சென்று கொண்டிருந்தபோது கந்துபட பகுதியில் முச்சக்கர வண்டி வீதியை விட்டு விலகிச் சென்று வீதியின் அருகில் இருந்த குழி ஒன்றில் விழுந்து சிதைவடைந்த கணு ஒன்றில் மோதி விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் இதற்கு முன்னர் இருதய நோயினால் பாதிக்கப்பட்டவர் எனவும் விபத்திற்குள்ளான நிலையில் கெக்கிராவ வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்துள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 06/13/20/27 மார்ச் 2024 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 06/13/20/27 மார்ச் 2024 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 05/12/19/26 மார்ச் 2024 | இல. 134, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 05/12/19/26 மார்ச் 2024 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 07/14/21/28 மார்ச் 2024 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 07/14/21/28 மார்ச் 2024 | இல. 865, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி. |
| 01/04/11/18 மார்ச் 2024 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழு

## பதவிக்காக புதிதாக சேர்த்துக் கொள்ளல்

தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் தற்போது வெற்றிடமாகவுள்ள சிரேஷ்ட ஆய்வு அதிகாரி, சட்ட உதவியாளர், அபிவிருத்தி அதிகாரி, மொழி பெயர்ப்பாளர் (தமிழ்), முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிக்கும் முறை**

தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ இணைய தளமான www.rticommission.lk இற்கு பிரவேசித்து "வெற்றிடங்கள்" ஐ கொன் இற்குக் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கு பிரவேசித்து கல்வித்தகைமைகள், சேவை அனுபவம் மற்றும் வேறு மேலதிக தகைமைகள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன் அங்கு குறிப்பிடப்படும் மாதிரி விண்ணப்பத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 2024.02.09ம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழு,**
**அறை இலக்கம் 203 - 204**
**கட்டிட இல.02**
**பண்டார நாயக சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம்**
**கொழும்பு - 07**

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய மாகாணம்

**மத்திய மாகாணத்தின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்வலு மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிருமாண அமைச்சு நுவரெலிய வீதியில் அமைந்துள்ள கம்பளை வர்த்தக நிலையத்தை 15 வருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கல் மற்றும் இயக்குதல், முகாமைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக கேள்விகளை அழைத்தல்**

# விலைமனுக்களை அழைத்தல்

**CONTRACT No.: CPC/PRDA/FA/GCC/TEN-01**

தலைப்பு: 15 வருட காலப்பகுதிக்கு கம்பளை வர்த்தக நிலையத்தை 'குத்தகையில் வழங்குவதற்காக' கேள்விகளை அழைத்தல்.

01. 15 வருடங்களுக்கு நுவரெலிய வீதி கம்பளையிலுள்ள கம்பளை வர்த்தக நிலையத்தை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு விலைமனு ஆவணங்களுக்கமைவாக குத்தகைக்கு வழங்கல், மற்றும் இயக்குதல், முகாமைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது ஆர்வம் கொண்டுள்ளதாக இருப்பதுடன் பெறுகைக் குழுத் தலைவரானவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை மேலேயுள்ள அழைத்தலுக்கான சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற நபராவார்.
02. வர்த்தக நிலையத்தின் மொத்த தரைப்பரப்பானது ஏறக்குறைய 25000 அடி$^2$ என்பதுடன் தரையின் கீழ் 50 வாகன நிறுத்தல்களுக்காக ஒதுக்கப்பட்ட தரையின் கீழ் இடங்களும் வெளியிடத்திலும் திறந்த கூரை மேல் பகுதியானது கடைகள், அலுவலகங்கள், உணவுக்கூடங்கள், வங்கிகள், மகிழ்வூட்டல் இடங்களும் அடங்கலானதும் இரு படிக்கட்டுக்களும் இரு பயணிகள் மின்தூக்கிகளும் அமைந்துள்ளன.
03. 2024.01.31 ஆம் திகதியிலிருந்து 2024.02.22 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கண்டி, போகம்பர, எஹெலப்பொல குமாரிஹாமி மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை தலைமையலுவலகத்தின் பொது முகாமையாளருக்கு வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கள் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளரின் பெயரில் செங்கடகல மக்கள் வங்கிக் கிளையின் 158100110000022 என்ற கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணமான 5,000 இலங்கை ரூபாவை செலுத்தி பெற்றுக் கொண்ட பணக்கொடுப்பனவு துண்டை வழங்குவதன் மூலம் விலைமனு ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.
04. இந்த விலைமனுக்களில் பின்வரும் முக்கிய தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்குபற்றல் வேண்டும்.
    - 4.1. இலங்கையின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றவொரு கம்பனியாகவிருத்தல் அல்லது 1890 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பங்குடமை கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு பெற்றிருத்தல் அல்லது இலங்கையில் உருவாக்கப்பட்ட கூட்டுமுயற்சி பங்குடமையுடன் ஒரு (01) இலங்கையர் கூட்டுமுயற்சி பங்குதாரராகவும் பிரதான பங்குதாரராகவுமிருத்தல்.
05. விலைமனுதாரரின் அல்லது விலைமனுதாரர்களின் நியமிக்கப்பட்ட பிரதிநிதி (பிரதிநிதிகள்) 2024.02.13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கம்பளை, நுவரெலிய வீதி கம்பளை வர்த்தக நிலையத்தில் நடைபெறவுள்ள விலைமனுக்கூட்டம் மற்றும் தளவிஜயம் ஆகியவற்றிற்கு கட்டாயமாக சமுகமளித்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் 2024.07.23 ஆம் திகதியன்று வரையும் (180 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
07. ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள விலைமனு பிணையின் உருமாதிரிக்கமைவாக இலங்கை மத்திய வங்கியினால் பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,000,000 இ.ரூபாவிற்கான (பத்து இலட்சம் இலங்கை ரூபா) முன்மொழியப்பட்ட விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணையானது 210 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
08. குத்தகைக் காலமானது குத்தகை ஒப்பந்தமிடும் திகதியிலிருந்து 15 வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளதுடன் தெரிவு செய்யப்படும் விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுக்கமைவாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்படல் வேண்டும்.
09. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2024.02.27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மத்திய மாகாணத்தின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்வலு மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிருமாணம், இல. 109, யட்டிநுவர வீதி, கண்டி என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். பொதுவான தகவல் மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவானது மத்திய மாகாணத்தின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்வலு மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிருமாண அலுவலகத்தில் விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளலை மூடிய பின்னர் திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர்கள் மற்றும்/அல்லது அவர்களின் நியமிக்கப்பட்ட சமுகமளிக்க விரும்புகின்றவர்கள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
10. பெறுகைக் குழுவின் உரிமையாளர் மற்றும்/ அல்லது தலைவர் பெற்றுக் கொண்ட எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்கான எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் நிறைவேற்றுவதற்கான தகுதியை கொண்டுள்ளார்.
11. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கண்டி, போகம்பர, எஹெலப்பொல குமாரிஹாமி மாவத்தை 09 ஆம் இலக்கத்திலுள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமையகத்திலிருந்து 081-2052279 / 081-2052308 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக மற்றும் prdatender@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றிலிருந்து மேலதிக தகவலை பெற்றுக் கொள்ளலாம்.

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்வலு**
**மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும்**
**நிருமாண அமைச்சு,**
**மத்திய மாகாணம்.**

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்**

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்திற்கு 1,000 ± 5% மெ. Triple Super Phosphate (TSP) உரத்தை பைகளில் வழங்குவதற்கான விலைக்கோரல்

**விலைக்கோரல் இல. 2024/CCF/ICB/TSP/01**

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் நிறுவனத்திற்கு மாற்றமுடியாத, திரும்பப்பெற முடியாத, கடன் கடிதம் (LC நிபந்தனைகள்) கொடுப்பனவு நிபந்தனைகளின் கீழ் 1,000 ± 5% மெ. தொன் Triple Super Phosphate (TSP) வழங்குவதற்காக புகழ்வாய்ந்த உர உற்பத்தியாளர்கள், முதன்மையானவர்கள், வழங்குநர்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| விலைக்கோரல் இல. | அளவு (மெ.தொ) | உரத்தின் வகை | விலைக் கோரல் பிணை உத்தரவாதம் | மீளளிக்கப்படாத விலைக் கோரல் கட்டணம் | கொழும்புக்கு விநியோகித்தல் |
|---|---|---|---|---|---|
| 2024/CCF/ICB/TSP/01 | 1,000± 5% | Triple Super Phosphate (TSP) | USD 5,000.00 | ரூபா 25,000.00 | கடன் கடிதம் நிறுவப்பட்ட நாளிலிருந்து 42 நாட்கள் |

02. விலைமனுதாரர்கள் பின்வரும் மூலப் பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - I. சகல விலைமனுதாரர்களும் இந்த ஒப்பந்தத்தின் கீழான பொருட்களை வழங்குவதற்கு சட்டபூர்வமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - II. விலைமனுதாரர்கள் ஆர்வ முரண்பாடுகளைக் கொண்டிருத்தல் கூடாது.
    - III. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நாளில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருடங்களுக்கு அந்தந்த நாட்டில் பொருத்தமான அதிகாரத்தில் வியாபாரமாகப் பதிவு செய்திருத்தல்.
    - IV. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நாள் முதல் அண்மைய கடந்த (01) ஒரு வருட காலத்திற்குள் எந்தவொரு நாட்டிற்கும் இரசாயன உரம் அல்லது வேறேதேனும் பொருட்களின் சர்வதேச வர்த்தகத்தில் அனுபவம்.
    - V. வெளிநாட்டு விலைமனுதாரர்கள் விடயத்தில் உள்நாட்டு பிரதிநிதி / உள்நாட்டு முகவர் முதன்மையாளரின் சார்பாக பிரதிநிதித்துவம் செய்தல் வேண்டும்.
03. சகல விலைமனுக்களுடனும் இலங்கையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட மேற்கூறப்பட்ட பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை உத்தரவாதம் அல்லது வங்கி வரைவு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைக்கோரல் பிணை உத்தரவாதரம் / வங்கி வரைவு மேற்கூறப்பட்டவாறு இருக்க வேண்டும்.
04. விலைக்கோரல் ஆவணத்தின் ஒரு தொகுதிக்கு முறையே மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் வத்தளை, ஹுணுப்பிட்டிய, வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் இறக்குமதி) அவர்களிடமிருந்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தனித்தனியாக கொள்வனவு செய்யலாம்.
05. விலைக்கோரல் ஆவணங்கள் 2024-02-19ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.30 மணி மற்றும் பி.ப. 3.30 மணிக்கிடையில் வழங்கப்படும்.
06. விலைக்கோரல்கள் சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும். (ICB)
07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-02-08ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு வத்தளை, ஹுணுப்பிட்டிய, வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் இடம்பெறும்.
08. முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு 2024-02-20ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

    **தலைவர்,**
    **திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
    **பெறுகைப் பிரிவு,**
    **வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்,**
    **ஹுணுப்பிட்டிய, வத்தளை.**

09. விலைக்கோரல்கள் 2024-02-20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.
10. மேலதிக தகவல்களை வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி/தொலைநகல்: 94-11-2949091/ 94-11-4335713)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
**பெறுகை மற்றும் வழங்கல் பிரிவு,**
**வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்,**
**ஹுணுப்பிட்டிய,**
**வத்தளை.**
**திகதி: 2024-01-29.**

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

LSC

# விலைமனுக்கோரல்

## 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான செவனகல லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் தொழிற்சாலை இலக்கம் 01 இன் சிற்றுண்டிச்சாலை மற்றும் உபகரணங்கள் இலக்கம் 02 இன் சிற்றுண்டிச்சாலையை நடத்திச்செல்லல்

**விலைமனுக்கோரல் : (S-687)**

இலங்கை, செவனகல சீனி தொழிற்சாலை2024 மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான செவனகல லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் தொழிற்சாலை இலக்கம் 01 இன் சிற்றுண்டிச்சாலை மற்றும் உபகரணங்கள் இலக்க 02 இன் சிற்றுண்டிச்சாலையை நடத்திச்செல்வதக்கு செவனகல வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின்திணைக்கள கொள்முதல் குழுத் தலைவரினால் உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. கீழே உள்ள அட்டவணையின்படி மீளளிக்கப்படாத கட்டணத்தை பணமாக செலுத்தி **2024 பெப்ரவரி 19** ஆம் திகதி வரை வேலை நாட்களில் நேரப்படி **9.00 மணி முதல் 15.00** மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும்.

| தொடர் இல | பிரிவு | மனு இலக்கம் | மீள்ளளிக்கப்படாத தொகை (ரூ). | மனுப் பாதுகாப்பு (ரூ). |
|---|---|---|---|---|
| 01 | சிற்றுண்டிச்சாலை 01 (தொழிற்சாலை) | S-687-1 | 2,500.00 | 150,000.00 |
| 02 | சிற்றுண்டிச்சாலை 02 (உபகரணங்கள்) | S-687-2 | 2,000.00 | 100,000.00 |

2. விலைமனுக்களை **2024 பெப்ரவரி 20** ஆம் திகதி **14.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"குறித்த விலமனுக்கோரலின் பெயர் மற்றும் இலக்கத்தினை"** தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
3. அனைத்து விலைமனுக்களும் மேலே உள்ள அட்டவணையின்படி **"மனுப் பாதுகாப்பு"** இணைத்திருத்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து **119** நாட்களுக்கு செல்லுபடியாகும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: **+94 11 2584184,** கைத்தொலைபேசி **: + 94 77 010 3359,** தொலைநகல்:**+94 11 2500674,** மின்னஞ்சல்:(**sapumal@lscl.lk).**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04.**

SEL ACINE

# எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் | திகதி | முகவரி |
|---|---|---|
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 124, காலி வீதி, தெகிவளை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 84 A, காலி வீதி, தெகிவளை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 51A, W.A. சில்வாமாவத்தை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 18, கெசல்வத்த, பாணந்துறை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 358/D, மதுக்கம வீதி, தர்கா நகரம். |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 534, காலி வீதி, வாட்டுவ. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 25, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவளை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 24/A, பிரதான வீதி, கன்வெல்ல. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 25A, பிரதான வீதி, ஹெறலியகொட. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 755/1, பன்னிப்பிட்டியவீதி, பத்தரமுல்ல. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 434, E.W.பெரேரா மாவத்தை, கோட்டை வீதி, பிடகோட்டை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 595, உயர்மட்ட வீதி, கங்கொடவில, நுகேகொட. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தல. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 28, தெகிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 227, டி சொய்சா வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 91, உயர்மட்ட வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 11, கல்தேமுல்ல வீதி, மொறட்டுவ. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 19, தனயம் பிவிசம் மாவத்தை, பலாங்கொட. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவல. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 89, கீழ் தெரு, பதுளை. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 87. பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 48, இரத்தினபுர வீதி, பதுரலிய. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 96, அகலவத்தை வீதி, மத்துகம. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 49, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹராம |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிப்பிட்டிய. |
| 01/04/11/18 | மார்ச் 2024 | இல. 138 D/1, ஹம்பாந்தோட்ட வீதி, அம்பலாந்தோட்ட. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்கல்லே. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 2, H.V. கட்டிடம், டெல்லாவ வீதி, நெலுவ. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 282, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 598 E, ஹிரிம்புரா வீதி, கராபிட்டிய. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 13, ஸ்டேஷன் ரோடு, மாத்தறை. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 722, விஹார சந்தி, வரகொட வீதி, களனி. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 482, அவிசாவளை வீதி, கடுவெல்ல. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்த. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல: 365, உயர்மட்ட வீதி, கொட்டாவ. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 419, கோட்டை வீதி, ராஜகிரிய. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 835/2A, தலங்கம, யர்த், மாலபே. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 124/A, துட்டகெமுனு வீதி, கொகுவெல்ல. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 69, தெகிவளை வீதி, மகரகம. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 227/A, உயர்மட்ட வீதி, வத்தேகெதர, மகரகம. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 76, உயர்மட்ட வீதி, ஹோமாகம. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 50/12, கொடகம வீதி, அதுருகிரிய. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 54, D. S. சேனநாயக்க மாவத்தை, பொரல்லை. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 239, கிருள வீதி, நாரஹேன்பிட்டிய |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 282, நாகலகம் வீதி, கொழும்பு 14. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 52/17, கொத்தடுவ புதிய நகரம், கொத்தடுவ. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 197, மன்ஸ் வீதி, கொழும்பு10. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 65/A, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 05/12/19/26 | மார்ச் 2024 | இல. 1024, மருதானை வீதி, கொழும்பு10. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சிய. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம் . |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியகம. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 03, சென்.லூசியாஸ் வீதி, கொட்டஹேனா. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 149, KB கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 21, சென்.ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ். |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 18, எலகந்த, கந்தல, வத்தல. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 530, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு15. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 107, சென்.ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 40 A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 106 C, குருநாகல வீதி, புத்தளம். |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 75 A, சிலாபம் வீதி, மாரவில. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 84, பிரதான வீதி, கல்பிட்டிய. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 17, ஸ்டேஷன் வீதி, கந்தலை சந்தி, வத்தலை. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 661/A, தெவத்த வீதி, ராகம. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, யா-எல. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 434, பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | ராஜரட்டகட்டிடம், பிரதானவீதி, கதுருவெல்ல, பொலன்னறுவை. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 114, பிரதானவீதி, கந்தல |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 230, கண்டி வீதி, மாவன்னெல்ல. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 81, கண்டி வீதி, வரக்காப்பொல. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 57, வெயங்கொட வீதி, மினுவாங்கொடை. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 1B, பௌத்தலோக மாவத்தை, கம்பஹா. |
| 06/13/20/27 | மார்ச் 2024 | இல. 69, கிருல்ல வீதி, திவுலப்பிட்டிய. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமட. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 473, நுவரெலியா வீதி, புசல்லாவ. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பொலை. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 52, டன்பரா வீதி, ஹட்டன். |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 73, கொத்மலை வீதி, நாவலப்பிட்டிய. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலிய. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டிய. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல். |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 35, சரஸ்வி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 115, கொடுகொடெல்ல வீதி, கண்டி. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 298, கொழும்புவீதி, பிலிமத்தலாவ. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 13A, கண்டி வீதி, கெலியோயா. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 66, நாவலப்பிட்டிய வீதி, கம்பளை. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்ட. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 94, ராஜா வீதி, மாத்தளை. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 226, டிஎஸ். சேனநாயக்க வீதி, கண்டி. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 14, புதிய நகரம், திகன. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 56,57, எட்வின் விக்கிரமரத்ன வணிக வளாகம், புதிய நகரம், மஹியங்கனை. |
| 07/14/21/28 | மார்ச் 2024 | இல. 10/2, வங்கி எதிரில், புதிய நுகரம், தெஹியத்தகண்டி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 171, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | மானிப்பாய் வீதி, கைதடி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 35, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 3,5 வல்லை வீதி, சங்கானை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 126, 128, பிரதானவீதி, பருத்தித்துறை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 69, பிரதானவீதி, அச்சுவேலி |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 55, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 6, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 575, கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 76, தெல்லிப்பளை வீதி, பண்டத்தரிப்பு. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | வட்டார இல. 01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பிரதான வீதி, மல்லாவி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | PW வீதி, முல்லைத்தீவு. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 32B, 2ம் குறுக்கு வீதி, வவுனியா. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 12, வட்டாரஇல. 06, பிரதானவீதி, பேசாலை, மன்னார். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பிரதான வீதி, மருதங்கேணி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 25, ஹிரிஜா சந்திப்பு, கல்முனைவீதி, சம்மாந்துறை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பிரதான வீதி, திருக்கோவில் 01. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 04, கடிகார கோபுரம் எதிரே, அம்பாறை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பிரதான வீதி, பொத்துவில். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பிரதான வீதி, வவுனதீவு. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பாடசாலைஎதிரே, வைத்தியசாலைவீதி, களுவாஞ்சிக்குடி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல.71 A, பிரதான வீதி, ஆரயம்பதி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பிரதான வீதி, பிரிவு 10, கொக்கட்டிச்சோலை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | "சந்தை எதிர் வளாகம்", பிரதான வீதி, செங்கலடி. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டகளப்பு |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 50/2, பிரதான வீதி , கிண்ணியா. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | திருகோணமலை வீதி, கண்டலடி, வாகரை. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | பிரதான வீதி, கிரன். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 151, 153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 03, ஏறாவூர். |
| 15/22/25/30 | மார்ச் 2024 | இல. 252B , 252/1, கண்டி வீதி, திருகோணமலை. |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

**LB FINANCE**
உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

---

## களனி பல்கலைக்கழகம் - களனி

### மாணவ/மாணவியருக்கான விடுதி வசதிகளை வழங்குவதற்காக வீடு/கட்டிடம் குத்தகைக்கு விடல்

களனிப் பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவ, மாணவியருக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக தலுகம, பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து 05 கிலோமீற்றருக்குள் அமைந்துள்ள, கல்வியலாளர்கள் 100 இற்கு மேற்பட்டோருக்கு விடுதி வசதிகளை வழங்கக்கூடிய வீடு/பல வீடுகளை வாடகை அல்லது குத்தகைக்குப் பெறுவதற்கு உத்தேசிக்கப்படுகிறது. 2024.02.19 அல்லது அதற்கு முன் உதவிப் பதிவாளர், மாணவர் சேவைப் பிரிவு, களனிப் பல்கலைக்கழகம், தலுகம என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். இதுபற்றிய மேலதிக விபரங்களை 0112903125 தொ.பே இலக்கம் ஊடாக விசாறித்தறியலாம்.

01. வாடகை/குத்தகைக்கு வழங்கும் வீட்டின் முகவரி
02. உரிமையாளரை அழைக்கக்கூடிய தொலைபேசி இலக்கங்கள்/இலக்கம்
03. அவ் வீட்டில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு உள்ள தூரம். (பல்கலைக்கழகத்தில் இருந்து வருகைதரக்கூடிய பாதையை கோட்டு வரைபடம் மூலம் குறிப்பிடுங்கள்)
04. விடுதி வசதிகள் வழங்கக்கூடிய மாணவர் எண்ணிக்கை
05. இவ்வீடு பற்றிய விபரங்கள்
    i. வீட்டில் உள்ள அறைகளின் எண்ணிக்கை மற்றும் சதுரஅளவு
    ii. தற்போது காணப்படும் மலசலகூட எண்ணிக்கை மற்றும் குளியலறை எண்ணிக்கை
06. நீர் வசதிகள் வழங்கக்கூடிய முறை (கிணறு/குழாய் நீர்) மற்றும் நீர்த்தாங்கி கொள்ளளவு.
07. கழிவு நீர் அகற்றுதல் மேற்கொள்ளும் முறை (மலசலகூடம் மற்றும் வேறு கழிவு நீர்)
08. வழங்கக்கூடிய பாதுகாப்பு விதிமுறைகள்
09. மாணவர்களுக்கான சோடிக்கட்டில்கள் மற்றும் மெத்தைகள் வழங்கும் ஆற்றல் மற்றும் அளவு
10. வழங்கக்கூடிய வேறு வசதிகள்
11. உத்தேச மாதாந்த வாடகை/வரித்தொகை(அரசினால் விதிக்கப்படும் குத்தகைத்தொகை கொடுப்பனவுகளும் பொருந்தும்)

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம்**
**2024.01.28**

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.12.04 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு எஸ். றீ. பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2017.11.09 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1786 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஜே.எம்.சீ.எச். ஜயவர்தன அத்தாட்சிப்படுத்திய 2018.10.10 திகதியிட்ட ஈட்டு முறி இல. 234 ஆகியவற்றின் பேரில் பொல்கஸ்ஓவிட்ட, பாலகம, இல. 4/151 எனும் முகவரியில் அமைந்த இரேஷா பூட் புரொடக்ஸ் (பிரைவேற்) லிமிடெற்றிடமிருந்து (பணிப்பாளர்கள்: பொல்கஸ்ஓவிட்ட சியம்பலாகொட இல. 1/44 ஐச் சேர்ந்த திரு. கெடமான்ன கமகே லலித் சஞ்ஜீவ, மற்றும் பொல்கஸ்ஓவிட்ட, ஹல்பிட்ட, தவட்டகஹவத்த இல. 127 ஐச் சேர்ந்த திரு. கெடமான்ன கமகே அஜித் சஞ்ஜீவ மற்றும் கெடமான்ன கமகே சுதத் சஜீவ ஆகியோரிடமிருந்து BOC SME Special கடன் மீது 2023.11.13 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 46,258,279.49 (நாற்பத்தாறு மில்லியன் இருநூற்று ஐம்பத்தெட்டு ஆயிரத்து இருநூற்று எழுபத்தென்பது ரூபாய் நாற்பத்தொன்பது சதமும்) அத்துடன் ரூ. 30,262,609.67 (முப்பது மில்லியன் இருநூற்று அறுபத்திரெண்டு ஆயிரத்து அறுநூற்று ஒன்பது ரூபாய் அறுபத்தேழு சதம்) மீது ஆண்டுக்கு ஒன்பது தசம் ஐந்து (9.5%) வீதத்தில் 2023.11.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் தவணைக் கடன் மீது 2023.11.13 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 17,700,904.78 (பதினேழு மில்லியன் எழுநூறு ஆயிரத்து தொள்ளாயிரத்து நான்கு ரூபாய் எழுபத்தெட்டு சதமும்) அத்துடன் ரூ.9,021,613.73 (ஒன்பது மில்லியன் இருபத்தொரு ஆயிரத்து அறுநூற்றுப் பதின்மூன்று ரூபாய் எழுபத்து மூன்று சதம்) மீது ஆண்டுக்கு இருபத்தேழு தசம் ஏழு ஐந்து (27.75%) வீதத்தில் 2023.11.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட 2017.11.09 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1786 மற்றும் 2018.10.10 திகதியிட்ட ஈட்டு முறி 234 ஆகியவற்றின் பேரில் BOC SME Special கடன் மீது ரூ. 46,258,279.49 (நாற்பத்தாறு மில்லியன் இருநூற்று ஐம்பத்தெட்டு ஆயிரத்து இருநூற்று எழுபத்தொன்பது ரூபாய் நாற்பத்தொன்பது சதமும்) தவணைக் கடன் மீது ரூ. 17,700,904.78 (பதினேழு மில்லியன் எழுநூறு ஆயிரித்து தொள்ளாயிரத்து நான்கு ரூபாய் எழுபத்தெட்டு சதமும்) அத்துடன் 2023.11.14 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பிலியந்தலை மேற்தரக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

ஈட்டு முறியில் குறிப்பிட்ட அட்டவணை.

மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டத்தில் வகபனஹ பல்லேசிய பற்றுவில் தம்புள்ள நகர கிராம சேவகர் பிரிவு மற்றும் மாத்தளை வடக்கில் தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாநகர சபை எல்லைகளுள் பாதெனிய கிராமத்தில் அமைந்த "டகவில்ல அல்லது கிரிவல்ஹின்ன" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ்.பீ. திசாகேகர தயாரித்த 2016 மார்ச் 21 திகதியிட்ட வரைபடம் இல. 1581 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு A என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு A, வடக்கில் மல்லிகா குமாரி விஜேரத்னவின் காணியும் இக்காணியின் மீதிப் பாகமும், கிழக்கில் இக்காணியின் மீதிப்பாகமும் தெற்கில் ஜேன் நோனாவின் காணியின் நடைபாதையும் 20 அடி அகல பாதைக்கான ஒதுக்கமும் மேற்கில் 20 அடி அகல பாதைக்கான ஒதுக்கமும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் இரண்டு றூட் இருபத்தி மூன்று பேர்ச்சுகள் (ஏ.01, றூ.02,பே.23) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மாத்தளை காணிப்பதிவகத்தில் L 73/120 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணித்துண்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.ஜே.ஜே. பண்டார தயாரித்த 2017 மே 11 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 7068 இன் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டத்தில் வகபனஹ பல்லேசிய பற்றுவில் தம்புள்ள நகர கிராம சேவகர் பிரிவு மற்றும் மாத்தளை வடக்கில் தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாநகர சபை எல்லைகளுள் பாதெனிய கிராமத்தில் அமைந்த "டகவில்ல அல்லது கிரிவல்ஹின்ன" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.ஜே.ஜே.பண்டார தயாரித்த 2017 மே 11 திகதியிட்ட வரைபடம் இல. 7068 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 1, வடக்கில் சமரசிங்ஹ உரிமை கோரும் காணியும் அபேபால முதலாலி உரிமை கோரும் காணியும், கிழக்கில் எம்.டீ.றீ. டயஸ் விஜேசிங்ஹ உரிமை கோரும் இக்காணியின் மீதிப்பாகமும், தெற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.எம். அனுரரத்ன தயாரித்த 2003 மே 30 திகதியிட்ட வரைபடம் இல.2716 இல் காணித்துண்டுகள் 1 மற்றும் 2 உம் கே.டீ. அமரதாச உரிமை கோரும் காணியும், (வரிமதிப்பு இல. 782,784, மற்றும் 786) 20 அடி அகல பாதைக்கான ஒதுக்கம் மற்றும் அடிப்பாதையும் மேற்கில் 20 அடி அகல பாதைக்கான ஒதுக்கமும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 7068 இன் பிரகாரம் ஒரு ஏக்கர் இரண்டு றூட் இருபத்து மூன்று பேர்ச்சுகள் (ஏ.01, றூ.02, பே.23) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

அத்துடன் தெற்கு மற்றும் மேற்கு எல்லையிலிருந்து பாதை ஒதுக்கம் (20 அடி அகலம்) மீது மற்றும் அதன் மீதான வழி உரிமையும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திரு.பீ.ஏ.எம்.டி.சீ. தசநாயக்க**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**பிலியந்தலை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

## 2006 இல 5 நிதி மோசடியை தவிர்க்கும் சட்டத்தின் 8 (3) பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் சொத்துக்களை செயற்பாடற்றதாக்கும் அறிவித்தல்

மேற்படி சட்டத்தின் 35ம் பிரிவின் பிரகாரம் சட்டவிரோத செயற்பாடொன்றின் மூலம் ஈட்டப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாகும். மேற்படி சட்டத்தின் 7 மற்றும் 8ம் பிரிவின் பிரகாரம் 2024.01.10ம் திகதி முதல் காலி உயர்நீதிமன்றத்தில் HC/SPL/06/2024 இன் கீழ் செயற்பாடற்றதாக்கப்பட்டுள்ளது.

SP PG 6169, SP NB 9595, SP ND 3714 இலக்கம் கொண்ட 03 வேன்கள், SP CAC 5201, SP CAV 3579, SP CBC 6119, SP CAC 9693 இலக்கம் கொண்ட 04 கார்கள், IMUAL - A- 0376 GLE "சந்தலிதுவ" கடற்றொழில் வள்ளம், காலி மாவட்டத்தின், வெல்லபட பத்துவ ஹிக்கடுவ பிரதேச செயலக பிரிவில், ஹிக்கடுவ நகர சபை எல்லையில் இலக்கம் 57, வேவல கிராம அதிகாரி பிரிவில் வேவல அமைந்துள்ள வெள்ளவத்த எனப்படும் காணி, காலி நகர சபையின் வரிபனை இலக்கம் 252/29 காலி, மஹமோதரவில் அமைந்துள்ள 0.0178 ஹெக்டயர் விசாலமான காணி மற்றும் அங்குள்ள 04 மாடி கொண்ட வீடு மற்றும் வரிக் கட்டண இல 252/146 என்ற காலி, மஹமோதரவில் அமைந்துள்ள 0.0108 ஹெக்டயர் விசாலமான காணி மற்றும் அங்குள்ள 03 மாடி கொண்டுள்ள வீடு மற்றும் காலி மாநகர சபையின் இல. 12 பிரிவின், வரிக்கட்டண இலக்கம் 252/141 கொழும்பு வீதி வீடு மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட காணித் துண்டு.

மேற்படி சொத்து சம்பந்தமாக தமது உரித்து கோரலை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினர்களுக்கு வசதிகளை வழங்கும் முகமாக இத்தால் பிரசுரிக்கிறேன்.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்.**

---

## விலைமனு அறிவித்தல்

### 'Office 0365' என்ற உரிம புதுப்பித்தலுக்கான கேள்வி

### பத்தரமுல்ல Waters Edge லிமிட்டட்டிற்காக மின்னஞ்சல் முறை மற்றும் மைக்கிரோசொவ்ட் ஓவ்வீஸ் லைசென்ஸ்) 2024

**BID No.: WE/PUR/MOL/2024/03**

ஹோட்டலுக்காக Office 0365 License இன் புதுப்பித்தலுக்காக புகழ்வாய்ந்த கம்பனிகளிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பத்தரமுல்ல **Waters Edge Limited** அழைக்கின்றது.

கேள்வி படிவங்கள் மற்றும் உரித்தான ஆவணம் ஆகியனவற்றை 2024 சனவரி 29 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ருவரி 11 ஆம் திகதி வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை ஒவ்வொரு கேள்விப் படிவத்திற்கும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், **Waters Edge Limited** இன் கொள்வனவு திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்பு:** விலைமனுவை மூடும் நாளானது 2024 பெப்ருவரி 12 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்காகும்.

தலைவர், பெறுகைக் குழு (திணைக்கள பெறுகைக் குழு கீழ்மட்டம்)
**Waters Edge Ltd.**

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வருவனவற்றை பார்வையிடவும்.

**https://www.promise.lk**
**https://www.watersedge.lk/news/**
**தொலைபேசி: 011 2863863/ 011 2887050 (நீடிப்பு: 3030)**

---

## கேள்வி அறிவித்தல்

### கைத்தொழில் அமைச்சு

### இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் புல்மோட்டை பொறித்தொகுதியிலிருந்து திருகோணமலை துறைமுகம் வரை கனிய மணலை போக்குவரத்து செய்தல்

**LMSL/SUP/DPC/02/2024**

கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் நிறுவனத்தின் புல்மோட்டை பொறித்தொகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட இல்மனைட் கனிய மணலை புல்மோட்டை பொறித்தொகுதியிலிருந்து திருகோணமலை துறைமுகம் வரை போக்குவரத்துச் செய்தல் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்காக தகைமை வாய்ந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. இதில் ஆர்வம் கொள்ளும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை ராஜகிரிய, சரண மாவத்தை, 341/13ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-01-29ஆம் திகதி முதல் 2024-02-08ஆம் திகதி வரையில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
2. மீளளிக்கப்படாத இருபத்தையாயிரம் ரூபாவை (ரூபா 25,000.00) ரொக்கப் பணமாக செலுத்துவதன் பேரில் 2024-01-29ஆம் திகதி முதல் 2024-02-08ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தின் வழங்கல் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
3. இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் பெயருக்கு 2,400,000.00 ரூபா பெறுமதியான வர்த்தக வங்கி பிணை முறியொன்றை (Bid Bond) 60 நாட்களில் செல்லுபடியாகும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தலாம்.
4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2024-02-09ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அல்லது அவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனடுத்து அச்சந்தர்ப்பத்தில் சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
5. உரித்துடைய ஏனைய விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் கேள்வி ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்

**வழங்கல் முகாமையாளர்**
**011-2883972 (நேரடி)**
**011-2883951/2**

**பிரதிப் பொது முகாமையாளர் (பொ/செ) – புல்மோட்டை**
**026-2256131, 026-2256132**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்,**
**இல. 341/13, சரண மாவத்தை,**
**ராஜகிரிய.**

---

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
+94 112429342
+94 112429343

---

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்



**118 ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு**

PG-3619 MAHINDRA GENIO 2015, CAB அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 006367



**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

LO-8082 MITSUBISHI CANTER 2014, 227-4501 MITSUBUSHI CANTER 1999, LORRIES அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 006369



**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

QE-4165 BAJAJ 2006, QH-3589 BAJAJ 2006, THREE WHEELER அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 006368

### வேலைவாய்ப்பு

**321 வெற்றிடங்கள் தோட்டத்துறை**

இறப்பர் பால் வெட்டுதல் மற்றும் தென்னந் தோட்ட வேலைக்கு குடும்பம் தேவை. 0712724866, 0769259188 006364

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk



கம்பளை பிரதான வீதியில் அமைந்திருக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தார் திருவருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் தைப்பூச மஹோற்சவத்தைத் தொடர்ந்து தேர் பவனியின் போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.
(படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

மாத்தளை மாவட்ட

## கிராமிய மேம்பாட்டு திட்டங்களுக்கு 235 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் இவ் வருடம் முன்னெடுக்கப்படும் கிராமிய பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு அரசினால் 235 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான நாலக்க கோட்டகொட பண்டார தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான கிராமிய பொருளாதார திட்டங்களுக்கு அரசு 11750 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மாத்தளை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 235 மில்லியன் ரூபா நிதி உதவியை கொண்டு பல்வேறு கிராமிய பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



ஹட்டன், பன்மூர் எஸ்டேட்டில் உள்ள கருமாரியம்மன் ஆலயத்தில் இயங்கி வரும் ஹரி ஓம் பிரணவம் கலைமகள் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளை படத்தில் காணலாம். இதன் பிரதம ஆசிரியர் தனபால் இவர்களுக்கு போதித்து வருகிறார்.

## காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுக்கும் 'உருமய' வேலைத் திட்டம்

(தம்புள்ள தினகரன் நிருபர்)

நிரந்தர காணி உறுதிகளைப் மக்களுக்கிடையே பெற்றுக் கொடுக்கும் தேசிய வேலைத் திட்டத்தை மாத்தளை மாவட்டத்தை கேந்திர நிலையமாகக் கொண்டு ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கடந்த பல வருடகாலமாகவே தீர்க்கப்படாதிருக்கும் இக் காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் செயற்படுத்தப பட்டிருக்கும் இத்தேசிய வேலைத் திட்டத்திற்கு 'உருமய' ( உரிமை) எனப் பெயரிடப் பட்டுள்ளதுடன் இத் திட்டத்தை தம்புள்ளையிலிருந்து ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் விடயம் தொடர்பான விசேட கலந்துரையாடல்கள் கடந்த வெள்ளிக் கிழமை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் வசந்த பெரேரா ஆகியோரின் தலைமையில் தம்புள்ள ரங்கிரி சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

## ஊவா மாகாண சபையின் ரூ. 53மி நிதி ஒதுக்கீட்டில் புதிய பாலம்

(ஊவா சுழற்சி நிருபர் )

ஊவாபரணகம ஹகுன்னேவ பல்லேவெல்ல பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலத்தினை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு கப்பல் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா மற்றும் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் இடம் பெற்றது.

ஊவாபரணகம, ஹகுன்னேவ, பல்லேவெல்ல பிரதேச விவசாயிகள் வீதி வசதி மற்றும் போக்குவரத்து வசதிகளின்றி பல வருட காலம் கால்நடையாக செல்கின்றனர். இவர்கள், பல்லேவெல்ல ஆற்றை கடந்து பல சிரமத்திற்கு மத்தியில் தமது விளை பொருட்களை சந்தைப் படுத்த முடியாது தவித்துக் கொண்டிருந்தனர். இந் நிலையையறிந்த ஊவா மாகாண சபையினர் ரூபா.53, மில்லியன் பணத்தினை ஒதுக்கி வீதி மற்றும் பாலத்தை நிர்மாணித்து கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# மலைச்சாரல்

## இரத்தினக்கல் அகழ்வின் போது வீதிக்காப்பு ஒப்பந்தம் செய்ய பணிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் சட்டரீதி யான முறையில் அனுமதிப்பத்திரம் பெற்று இரத்தினக்கல் அகழும் போ து பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுவதால் இதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் போது கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சபரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை இப்பணிப்புரையை இரத்தினக்கல் அதிகார சபையிடம் முன் வைத்துள்ளது.

இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் தமது வேலைகள் முடிந்த பின் வீதிகளுக்குப் பாரதூரமான சேதங்களை ஏற்படுத்தியபின் அவ்விடங்களை கைவிட்டுச் செல்வதாகவும் அதன் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபை பாதிக்கப்பட்ட வீதிகளை புனர்நிர்மாணம் செய்ய அதிக அளவு நிதியை ஒதுக்க வேண்டியுள்ளதாகவும் சப்ரகமுவ வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.கொடல்லவத்த ஊடகங்களுக்குத் தெரிவித்தார்

இரத்தினக்கல் அகழ்வுகள் மூலம் எஹலியகொடை பதுவத்த வீதியில் தும்மோதரவிலும் இரத்தினபுரி கொஸ்பெலவின்ன வீதியிலும் குருவிட்ட ஹல்பே கொரகாஎல பகுதியிலும் தும்மோதர விகாரை அருகிலும் கரபிஞ்ச பகுதியிலும் கொட் டாமுல்ல திமியாவ தம்புலுவானை உட்பட மேலும் சில இடங்களிலும் இவ்வாறு வீதிகள் சேதம் அடைந்து உள்ளமையினால் இவற்றைத் தொடர்ந்து நிர்மாணம் செய்ய மாகாண சபை நிதி ஒதுக்க வேண்டும்.

மேலும் புதிதாக இரத்தினக்கல் அகழ்வுக்காக அனுமதி வழங்கும் போது குறிப்பிட்டளவு பணத்தை வைப்பிலிடவும் வீதிகளை பாதுகாப்பு வலயமாக அறிவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் இரத்தினக்கல் அதிகார சபையை எழுத்து மூலம் அறிவுறுத்தியுள்ளார்

## நாவற்குழியில் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி

(கரவெட்டி தினகரன் நிருபர் )

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நாவற்குழியில் சனிக்கிழமை (27.01.2024) இடம் பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நாவற்குழி முத்தமிழ் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ந. கேதீஸ்வரசிவம், செ. கிருஸ்ணகோபால், கு. கல்யாணசுந்தரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டி, அவர்களிடையே சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக, அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்கேற்பாளர்களாக்கும் நோக்குடன் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தைக் கிராமங்கள் தோறும் முன்னெடுத்து வருகிறது. இதன் தொடராகவே நாவற்குழியில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அதிக எண்ணிக்கையான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் கனடா ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பின் அனுசரணையுடன் சூழல் விழிப்புணர்வு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# வடக்கின் உதயம்

## குடிசார் அமைப்புக்களின் சம்மேளன ஏற்பாட்டில் இராஜ கிராமத்தில் கலந்துரையாடல்

(சாவகச்சேரி விசேட நிருபர் )

யாழ்.மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் புதன்கிழமை கரவெட்டி மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள இராஜ கிராமத்தில் கிராம மட்ட அமைப்புக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நலிவுற்ற கிராமங்களை வளப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப் பட்ட மேற்படி கலந்துரையாடலில் கரவெட்டி மேற்கு கிராம அலுவலர், கரவெட்டிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், யாழ் மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் திருமதி ம.தமிழ்ச்செல்வி, குடிசார் அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிராம மக்கள் எதிர்நோக்கின்ற பொருளாதார பிரச்சனைகள், சமூகப் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு அதற்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேவைப்பாடுடைய குடும்பத்திற்கு வாழ்வாதார உதவி வழங்கல்

(சாவகச்சேரி விசேட நிருபர் )

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிக் கிராமத்தில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு மிருசுவிலைச் சேர்ந்த துஸ்யந்தன் நந்தினி குடும்பத்தினரால் 9இலட்சம் ரூபாய் நிதிப் பங்களிப்பில் 27/01 சனிக்கிழமை வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் செ. மயூரனின் வேண்டுகோளிற்கு இணங்க கோழி வளர்ப்பிற்கான கொட்டகை, கோழிகள் மற்றும் 530முட்டைகளை ஒரே தடவையில் அடை வைக்கக்கூடிய அடைப்பொறி ஒன்றும் மேற்படி குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் மயூரன்,நிதிப் பங்களிப்பாளரின் உறவினர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் ஈரநிலத்திற்கான இயற்கை நடைபயணம்

யாழ். விசேட நிருபர்



சர்வதேச ஈரநில தினம் எதிர்வரும் 02ஆம் திகதி கொண்டாப்படவுள்ள நிலையில் அதனை முன்னிட்டு எதிர் காலத்திற்கான சுற்றுச்சூழல் கழகமும், சிறகுகள் அமையமும் இணைந்து பாடசாலை மாணவருக்கான களப்பயணத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இயற்கை மற்றும் வனவிலங்கு ஆர்வலர் ம.சசிகரனின் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற களபயணத்தின் போது, செம்மணி பிரதேசத்தில் அமைந்துள்ள ஈரநிலப் பிரதேசத்தினுள் மாணவர் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு அவர்கள் ஈரநிலத்தில் வாழும் சிற்றுயிர்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள் என்பவற்றை அவதானிக்க புலமை மிக்க வளவாளர்களால் வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இங்கு மாணவருக்கு ஈரநிலங்களின் முக்கியத்துவம், ஈரநிலங்கள் பாதுகாக்கப்படலில் ஒவ்வொரு தனி மனிதனதும் பங்களிப்பு என்பனவும் எடுத்துக் கூறப்பட்டது.

இவ் ஈரநிலத்திற்கான இயற்கை நடைபயணத்தில் மாணவர்கள் மட்டுமன்றி சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் வயது வேறுபாடின்றி மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றியதையும் அவதானிக்க முடிந்தது.

# ஆப்கான் டெஸ்ட்: இலங்கையின் 15 பேர் உத்தேச அணி அறிவிப்பு

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டிக்கான தனஞ்சய டி சில்வா தலைமையிலான 15 பேர் கொண்ட இலங்கை உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணியை இலங்கை முதல் முறை எதிர்கொள்ளும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி கொழும்பு, எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த டெஸ்ட் போட்டியுடன் தலா மூன்று ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் ஆடுவதற்காக ஆப்கான் அணி நாளை இலங்கை வரவுள்ளது.

இந்நிலையில் இலங்கை தேர்வுக் குழுவினர் இந்த டெஸ்ட் போட்டிக்கு மூன்று புதுமுக வீரர்களுடன் 15 பேர் கொண்ட அணியை தேர்வு செய்திருப்பதாக தெரியவருகிறது. இதில் டெஸ்ட் அனுபவம் இல்லாத லஹிரு உதார, சாமிக்க குணசேகர மற்றும் மிலான் ரத்னாயக்க ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.



இலங்கை பந்துவீச்சு வரிசையில் பிரபாத் ஜயசூரிய, ரமேஷ் மெண்டிஸ், விஷ்வ பெர்னாண்டோ மற்றும் அசித்த பெர்னாண்டோ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். பந்துவீச்சு வரிசையில் அனுபவ மற்றும் இளம் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டின் ஐ.சி.சி. டெஸ்ட் அணியில் இடம்பெற்ற திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ் மற்றும் அணித்தலைவர் தனஞ்சய ஆகிய அனுபவ வீரர்களுடன் நிஷான் மதுஷங்க மற்றும் சதீர சமரவிக்ரம ஆகிய இளம் வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

**உத்தேச அணி: தனஞ்சய டி சில்வா (தலைவர்), குசல் மெண்டிஸ் (உ.த.), திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், சதீர சமரவிக்ரம, நிஷான் மதுஷங்க, கமிந்து மெண்டிஸ், லஹிரு உதார, பிரபாத் ஜயசூரிய, அசித்த பெர்னாண்டோ, கசுன் ராஜித்த, மிலான் ரத்னாயக்க, விஷ்வ பெர்னாண்டோ, சாமிக்க குணசேகர.**

# ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ண கால்பந்து போட்டி பெப்ரவரி 3இல்



*ருஸைக் பாரூக்*

கொழும்பு ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி 80ஆவது குழு பழைய மாணவர்கள் ஒழுங்கு செய்துள்ள 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கு இடையிலான 14ஆவது ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி வெற்றிக்கிண்ண கால்பந்து போட்டி எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஆரம்ப சுற்றுப் போட்டிகள் சுகததாச மைதானத்தில் நடைபெறவுள்ள நிலையில் தொடரின் இறுதிப் போட்டி மார்ச் 10ஆம் திகதி கொழும்பு, குதிரைப்பந்தய திடல் மைதானத்தில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இந்த போட்டி தொடர்பில் விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு கால்பந்து சம்மேளனத்தில் அண்மையில் நடைபெற்றதோடு பிரதான அனுசரணையாளர் ஒக்ஸ்போர்ட் குரூப் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் இம்தியாஸ் பாரூக் மற்றும் ஹிபாஸ் பாரூக் ஆகியோர் அனுசரணையை ஹமீட் அல் ஹுசைனி கல்லூரியின் அதிபர் எம்.ஆர்.எம். ரிஸ்கியிடம் கையளித்தனர்.

இப்போட்டியில் ஆனந்தா கல்லூரி, டி மசெனோட் கல்லூரி, அலிகார் மத்திய கல்லூரி, புனித பெனடிக்ட் கல்லூரி, புனித மேரீஸ் கல்லூரி, மாரிஸ்டெல்லா கல்லூரி, ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி, பதுரியா மத்திய கல்லூரி, புனித ஜோசப் கல்லூரி, புனித பீட்டர் கல்லூரி, கேட்வே கல்லூரி, வெஸ்லி கல்லூரி, புனித தோமஸ் கல்லூரி, றோயல் கல்லூரி, அல் முபாரக் தேசிய பாடசாலை, தாருஸ்ஸலாம் கல்லூரி, இசிபத்தான கல்லூரி, தர்ம தூதா கல்லூரி, அல் ஹிலால் மத்திய கல்லூரி மற்றும் அல் ஹுமைசரா கல்லூரி ஆகியன இடம்பெற்றுள்ளன.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலின் தாக்குதலுக்கு மத்தியில் காசாவுக்கான உதவியை பல நாடுகளும் நிறுத்தியதற்கு கண்டனம்

## பலஸ்தீனர்களின் மனிதாபிமான அவலம் உச்சம்



காசா மீது இஸ்ரேல் தாக்குதல்களை ஆரம்பித்தது தொடக்கம் இந்த நிறுவனம் அந்தப் பகுதியில் உள்ள தமது நிலைகளை இடம்பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்களுக்கு தற்காலிக முகாம்களாக பயன்படுத்தி வருகிறது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நீடித்து வரும் காசா மீதான இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்களால் அங்குள்ள 2.4 மில்லியன் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட அனைவரும் போல் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருப்பதோடு இஸ்ரேலின் முற்றுகையால் அங்கு உணவு, நீர், மருந்து மற்றும் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்நிலையில் காசாவில் நிலவும் மழை மற்றும் குளிர்காலம் நிலைமையை மேலும் மோசமடையச் செய்திருப்பதாக ஐ.நா எச்சரித்துள்ளது.

ஹேகிலுள்ள சர்வதேச நீதிமன்றம் இனப்படுகொலை செயற்பாடுகளை தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு இஸ்ரேலுக்கு உத்தரவிட்டபோதும் காசா மீதான அதன் வான், தரை மற்றும் கடல் மார்க்கமான தாக்குதல்கள் தொடர்ந்து நீடித்து வருகின்றன.

நேற்று (28) அதிகாலையில் கான் யூனிஸ் மற்றும் தெற்கு காசாவின் பல பகுதிகள் அதே போன்று காசா நகரின் மேற்கு பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களில் பலரும் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

இதில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் 165 பேர் கொல்லப்பட்டு மேலும் 290 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு கூறியது.

இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 26,422 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 65,087 பேர் காயமடைந்துள்ளனர் என்று காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 11,000க்கும் மேற்பட்ட பலஸ்தீன சிறுவர்கள் மற்றும் 7,500க்கும் மேற்பட்ட பெண்கள் அடங்குகின்றனர்.

இதனால் மேலும் தெற்காக எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவை நோக்கி மக்கள் தொடர்ந்து படையெடுத்து வருகின்றனர். அந்தப் பகுதி தற்போது காசாவின் சனநெரிசல் மிக்க இடமாக மாறியுள்ளது.

அங்கு பலரும் வீதிகளின் தங்கி இருப்பதாக ஐ.நா மனித உரிமை அலுவலகத்தின் அஜித் சுங்காய் குறிப்பிட்டுள்ளார். ரபாவில் பிளாஸ்டிக் கூடாரங்களை சூழ கணுக்கால் ஆழத்திற்கு நீர் நிரம்பி இருக்கும் படங்களை ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

'என்னால் தற்காலிக முகம் ஒன்றை, கூடாரம் ஒன்றை, எதனையும் பெற முடியவில்லை' என்று கான் யூனிஸின் கிழக்கில் உள்ள சிறு நகர் ஒன்றில் இருந்து இடம்பெயர்ந்து வந்த 70 வயது உம் இமாத் என்பவர் குறிப்பிட்டார்.

'நான் எல்லா போர்களையும் சந்தித்திருக்கிறேன்' என்று கூறிய அந்த முதிய பெண், 'இதனை விடவும் எந்தப் போரும் கடினமாக இருக்கவில்லை' என்றார்.

ஹமாஸை முற்றாக ஒழிப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொடர்ந்து சூளுரைத்தபோதும் இஸ்ரேல் படை காசாவில் மூன்று மாதங்கள் கடந்து எதிர்ப்பை சந்தித்து வருவதோடு காசாவில் பிடிக்கப்பட்டிருக்கும் எஞ்சிய பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் இஸ்ரேலுக்குள்ளும் நெதன்யாகு அரசுக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஒப்பந்தம் ஒன்றுக்குச் செல்லும்படி கடந்த சனிக்கிழமை இரவிலும் நெதன்யாகுவின் தனிப்பட்ட இல்லம் மற்றும் டெல் அவிவில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

போர் நிறுத்தம் மற்றும் அமைதியை கொண்டுவருவதற்கான இராஜதந்திர முயற்சிகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியாக அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏவின் தலைவர் வில்லியம் பர்ன்ஸ் பாரிஸ் நகரில் இஸ்ரேல் மற்றும் எகிப்து உளவுப் பிரிவுத் தலைவர்கள், அதேபோன்று கட்டார் பிரதமரை சந்தித்து பேசி இருப்பதாக பாதுகாப்பு வட்டாரத்தை மேற்கோள் காட்டி ஏ.எப்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னதாக கடந்த நவம்பரில் ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்தத்தில் ஹமாஸ் பல டஜன் பணயக் கைதிகளை விடுவித்ததோடு அதற்கு பகரமாக இஸ்ரேல் சிறையில் உள்ள பலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் 100 க்கும் அதிகமான பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு பதிலாக காசாவில் இஸ்ரேல் சுமார் இரண்டு மாதங்களுக்கு போரை இடைநிறுத்துவதன் கீழ் அமெரிக்கா தலைமையிலான பேச்சுவார்த்தையாளர்கள் இணக்கம் ஒன்றை நெருங்கி இருப்பதாக அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள்காட்டி வெளியாகி இருக்கும் இந்த செய்தியில், பேச்சுவார்த்தையாளர்கள் உடன்பாட்டு வரைவு ஒன்றை தயாரித்திருப்பதாகவும் அது தொடர்பில் பாரிஸில் பேச்சுவார்த்தை இடம்பெறும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவின் கான் யூனிஸ் நகரில் தொடர்ந்து இஸ்ரேல் உக்கிர தாக்குதல் நடத்தி வரும் நிலையில் பலஸ்தீன மக்கள் மேலும் தெற்காக இடம்பெயர்ந்து வருவதோடு பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கான நிதியை பல மேற்குலக நாடுகளும் இடைநிறுத்தி இருப்பது ஏற்கனவே மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் பலஸ்தீனர்களை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது.

கடந்த ஒக்டோபர் 07 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலில் 30,000 பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவன ஊழியர்களில் 12 பேர் தொடர்புபட்டிருப்பதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியதை அடுத்து அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட பல மேற்குல நாடுகள் அந்த நிறுவனத்திற்கான நிதியை இடைநிறுத்தியுள்ளன.

இதில் ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, பின்லாந்து, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளும் அடங்குகின்றன.

இந்நிலையில் 'காசாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கு இந்த மேலதிக கூட்டுத் தண்டனை தேவையில்லை' என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் ஆணையாளர் நாயகம் பிலிப்பே லசரினி எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் விசாரணை நடத்தி வருவதாகவும் இதனுடன் தொடர்புபட்டவர்கள் ஏற்கனவே பதவி நீக்கப்பட்டு விட்டதாகவும் அந்த ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிறுவனத்திற்கான மேலும் நன்கொடை நாடுகள் தமது நன்கொடைகளை இடைநிறுத்த வலியுறுத்திய இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் காட்ஸ், காசாவில் சண்டை முடிந்ததும் இந்த ஐ.நா நிறுவனம் மாற்றப்பட வேண்டும் என்றும் அது காசாவில் ஹமாஸ் அமைப்புடன் தொடர்புபட்டிருப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

காட்ஸின் இந்த கருத்துப் பற்றி ஐ.நா பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிடம் கேட்டபோது, " கருத்துகளுக்கு எம்மால் பதில் கூற முடியாது. பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவன வலுவான பதிவை கொண்டிருப்பதோடு அதனை நாம் தொடர்ச்சியாக கோடிட்டுக்காட்டுகிறோம்' என்றார்.

இந்த பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் உட்பட பல்வேறு ஐ.நா அமைப்புகள் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேற்படி ஒன்பது நாடுகளின் முடிவு பிராந்தியமெங்கும் குறிப்பாக காசா மனிதாபிமான பணிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருப்பதாக லசரினி எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் லசரினி வெளியிட்ட அறிவிப்பில் கூறியதாவது, "நிதி உதவியை நிறுத்துவதாக அறிவித்து இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த அமைப்பு காசாவில் முதன்மையான மனிதாபிமான நிறுவனமாகும். அதில் 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்களது உயிர்வாழ்விற்காக சார்ந்து உள்ளனர். போருக்கு மத்தியில் இதுபோன்ற முடிவுகள் ஏற்கனவே தலைவிரித்தாடும் பஞ்சத்தை அதிகரிக்கச் செய்யும். காசாவில் உள்ள பலஸ்தீனியர்களுக்கு மேலும் ஒரு கூட்டுத் தண்டனையை கொடுக்காதீர்கள்" என்றார். இதனை பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்திற்கு எதிரான இஸ்ரேலின் பிரசார நடவடிக்கை என்று பலஸ்தீன வெளியுறவு அமைச்சு சாடி இருப்பதோடு, சியோனிச எதிரிகளால் முன்னெடுக்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் ஊழியர்களை பணி நீக்குவதை ஹமாஸ் அமைப்பு கண்டித்துள்ளது.

1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம், காசாவில் இயங்கும் மிகப்பெரிய ஐ.நா நிறுவனமாகும். அந்த அமைப்பு காசா, மேற்குக் கரை, ஜோர்தான், லெபனான் மற்றும் சிரியாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கான சுகாதார பராமரிப்பு, கல்வி மற்றும் ஏனைய மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகிறது. காசாவில் மாத்திரம் இந்த அமைப்பில் சுமார் 13,000 பேர் பணியாற்றுகின்றனர்.





# ஹூத்தி தாக்குதலால் பிரிட்டன் கப்பலில் தீ

ஏதன் வளைகுடாவில் யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் ஏவுகணை தாக்குதலுக்கு இலக்கான பிரிட்டனுடன் தொடர்புபட்ட கப்பல் ஒன்று பல மணி நேரம் தீப்பற்றியுள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் தாக்குதலுக்கு பதிலடியாக மார்லின் லொன்டா என்ற இந்த கப்பலை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு பதில் நடவடிக்கையாகவே அமெரிக்கா மற்றும் பிரிட்டன் அந்தக் கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன.





மார்ஷல் தீவுகள் கொடியின் கீழ் செயற்படும் இந்தக் கப்பலில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டவரப்பட்டு துறைமுகத்தை நோக்கி பாதுகாப்பாக பயணத்தை தொடர்வதாக குறித்த கப்பல் நிறுவனம் சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

கப்பலில் இருந்த எவருக்கும் மாதிப்பு ஏற்படவில்லை என்று அமெரிக்க மத்திய கட்டளையகம் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்திலிருந்து, உலகின் முக்கியமான கடல் வழித்தடங்களில் ஒன்றான செங்கடல் வழியாகப் பயணிக்கும் வணிகக் கப்பல்கள் மீது ஹூத்திக்கள் டஜன் கணக்கான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் செங்கடல் பகுதியில் வணிக கப்பல்களின் போக்குவரத்துக்கு பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 29ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.